உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 26] பராபவ ஆண்டு மாசித்திங்கள் 10—3—67 [இதழ் 4

சோமநாதத்தில், ஜோதிர் லிங்க தரிசனம்

தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்
ஸ்ரீ சோமநாதரை வழிபடுதல்

தருமையாதீனக் குருமுதல்வர்

ஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

வெறும்பாழிற் பேரின்ப
வெட்டவெளி தன்னில்
குறும்பாளர் காணக்
குடிலின் — உறும்பாசம்
ஓட்டிஎனை வைத்தனனே
உற்றபிர பஞ்சமெலாம்
ஆட்டியஞா னப்பிரகா
சன். (50)

ஆசிரியர் :-
வித்துவான்,
சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள்

துணையாசிரியர் :-
வித்துவான்,
சி. அருணைவடிவேல் முதலியார்.

உ

குருபாதம்

"ஞானசம்பந்தம்"

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 26 | 10–3–67 | இதழ் 4

உட்பொருள்

எண்		பக்கம்
1	இலிங்கோற்பவர்	... 185
2	ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள் அருளுரை	... 191
3	தோட்டத்து மாம்பழம்	... 198
4	அப்பர் அருள் முரசு	... 201
5	சித்தாந்த வினாவிடை	... 205
6	சனிப்பெயர்ச்சியும் அர்ச்சனையும்	... 212
7	வேலூர் இலவச சித்த வைத்தியசாலை	... 214
8	'அமுதிற்குத் தமிழென்று பேர்'	... 142
9	திருத்தொண்டர் வரலாறு	... 224
10	மீன மந்தன்	... 228
11	சனி பகவான்	... 231
12	ஸ்ரீ வன துர்கா மகிமை	... 233
13	நவசத்திகளின் வழிபாடு	236
14	செய்திகள்	... 240
15	எதிர்காலம்	... 245
16	Extract from the Visitor's Book 197. 223	
17	மதிப்புரை	... 244

உ
குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 26] பராபவ - மாசி - 10—3—67 [இதழ் 4

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிர் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

இலிங்கோற்பவர்

இறைவனுக்கு, 'கடவுள்' என்னும் பெயர், ஆன்மாக்களின் மனம், மொழி, மெய் என்பவற்றையும், மற்றும் எல்லாப் பொருள்களையும் கடந்துநிற்கும் காரணம் பற்றிச் சொல்லப்படுவது. இறைவன் ஆன்மாக்களின் மனம் மொழி மெய்களுக்கு எட்டாதவனாயின், அவனை ஆன்மாக்கள் அடைவது எப்படி ?

எல்லாவற்றையும் கடந்துநிற்கும் இறைவன், ஆன்மாக்கள் தன்னை மனத்தால் நினைந்தும், வாயால் வாழ்த்தியும், காயத்தால் வணங்கியும் உய்தி பெறற்பொருட்டுத் தானே

தனது இச்சையால் பலவகைத் திருமேனிகளைக் கொண்டருளுவன். அவற்றின்வழியே ஆன்மாக்கள் அவனை நினைத்தும், வாழ்த்தியும், வணங்கியும் நன்மை பெறும்.

குணம், குறிகள் ஒன்றும் இல்லாத இறைவன் இங்ஙனம் பல திருமேனிகளைக் கொண்டருளும் பொழுது, அத்திருமேனிகளே அவனது குறியாகும். அவனது திருவருளைப் பெற்றவர் அக்குறிகளை நேரேகாண்பார்கள். ஏனையோர்க்கு அது கூடாமையால், அத்திருமேனிகளின் வடிவாகத் திருக்கோயிலில் அமைக்கப்பெற்ற வடிவங்களையே அவன் தனது திருமேனியாகக்கொண்டு அவைகளில் வீற்றிருந்து, அங்குச் செய்யப்படும் வழிபாடுகளை ஏற்றுக்கொண்டு, வேண்டுவார்க்கு வேண்டிய பயனை அளித்தருளுவான். அதனால், அவைகள் அவனது குறியென்றே கொள்ளப்படும்.

'குறி' என்பதே வடமொழியில், 'லிங்கம்' எனப்படும். 'லிங் - லயம்', 'கம் - தோற்றம்' என்றும், 'லிங்கம் - சித்திரித்தல்' என்றும் இதற்கு உறுப்புப் பொருள் கூறுவர். அஃது எவ்வாறாயினும், 'லிங்கம்' என்பது, 'குறி' என்னும் பொருளை உடையது என்பது தெளியப்பட்டதே.

இறைவன் ஆன்மாக்கள் பொருட்டுக் கொள்ளுகின்ற வடிவங்கள், 'அருவம், உருவம், அருவுருவம்' என மூவகையின. அருவம், கண்ணுக்குப் புலனாகாதது. அதனால் அதனை, 'அவ்யக்த லிங்கம்' என்பர். அவ்யக்தம் - வெளிப்பட்டுத் தோன்றாதது. உருவம், கண்ணுக்குப் புலனாவது. அதனால் அதனை, 'வ்யக்த லிங்கம்' என்பர். வ்யக்தம் - வெளிப்பட்டுத் தோன்றுவது. அருவுருவம், கண்ணுக்குப் புலனாகியும், ஆகாமலும் இருப்பது. அதனால் அதனை, 'வ்யக்தாவ்யக்த லிங்கம்' என்பர்.

உயிர்களின் உள்ளத்தில் நாதவடிவாயும், விந்துவடிவாயும் நின்று பொருள்களைப் பொதுவாக அறியும் அறிவைத் தரும் நிலையே அருவத்திருமேனியாகிய அவ்யக்தலிங்கம். நாதம், விந்து இரண்டினையும், 'பரநாதம், பரவிந்து' எனவும், 'அபரநாதம், அபரவிந்து' எனவும் தனித்தனி இரண்டாகப்

பிரித்து, பரநாதம், பரவிந்துக்களை, 'சிவம், சத்தி' என்னும் பெயராற் கூறுவர். எனவே, 'சிவம், சத்தி, நாதம், விந்து' என்னும் நான்கும் அருவத்திருமேனியாகிய அவ்யக்த லிங்கமாம். இவைகளை வழிபடுதல் இப்பெயருடைய தத்துவங்களில் இலயமலவாசனைமாத்திரம் உடையராய் வாழும் அபரமுத்தர்க்கு இயற்கையாகவும், ஏனையோர்க்கு, தசகாரியங்களில் சிவதரிசன சிவயோகங்களால் ஆன்மசுத்தியை எய்தும் நிலையில் செயற்கையாகவும் கூடும். திருவைந்தெழுத்தைச் சுத்தமானதமாகக் கணித்தல் முதலியன இவ்விடத்து நிகழ்வனவாம். இவ்விடத்தில் இறைவன் ஆன்மாவையே இடமாகக்கொண்டு நிற்றல்பற்றி இதனைத் திருமூலர், 'ஆத்மலிங்கம்' என்கின்றார். 'எட்டும் இரண்டும் உருவான லிங்கம்' என்று உண்மை விளக்கம் கூறுவதும் இதனையே.

அருவநிலையில் நிற்கும் இறைவன், பின் உருவங் கொள்ளுதற்குமுன், முகம், கை, கால், முதலிய உறுப்புக்கள் இன்றி, ஓர் ஒளிப்பிழம்பாய் விளங்குவன். அதுவே, அருவுருவத் திருமேனியாகிய வ்யக்தாவ்யக்த லிங்கம். இஃது ஆன்மாக்களுக்குச் செய்வன தவிர்வனவற்றைச் சிறப்பாக நூல்வழியே நன்கு உணர்த்திநிற்றலால், இதன்கண் மந்திரங்களே முகம் முதலிய உறுப்புக்களாய் நிற்கும். இவ்வருவுருவத்திருமேனியே சிவாலயங்கள் எல்லாவற்றிலும் மூலத்தானத்தில் விளங்குவது.

அருவுருவநிலையில் நின்ற இறைவன், பின், உலகத்தை ஆக்கிக்காத்து அழித்தற்பொருட்டும், அவரவரது வினைகட்கேற்ப அவரவர்க்கு, அருளும், தெறலும் செய்தற்பொருட்டும் 'போகவடிவம், யோகவடிவம், வேகவடிவம்' என்னும் மூவகையில் அமைந்த பலவகைத் திருமேனிகளைக் கொண்டருளுவன். அவையெல்லாம், 'மாகேசுர மூர்த்தங்கள்' எனப்படும். அவையே உருவத்திருமேனியாகிய வ்யக்தலிங்கம். சிவாலயங்களில் மூலத்தானத்தைச் சூழநின்று விளங்கும் சந்திரசேகரர், சோமாஸ்கந்தர், தட்சிணாமூர்த்தி, நடராசர், காலசங்காரர் முதலிய திருவுருவங்கள் எல்லாம் வ்யக்தலிங்கங்களே.

மூவகை இலிங்கங்களுள் அவ்யக்த லிங்கம் கண்ணுக்குப் புலனாகாமையாலும், வ்யக்தலிங்கம், போகவடிவம், யோகவடிவம், வேகவடிவம் என்பவற்றில் யாதானும் ஒன்றில் வரையறைப்பட்டு நிற்றலாலும், இவை எல்லாவற்றிற்கும் பொதுவாய் விளங்கும் வ்யக்தாவ்யக்த லிங்கமாகிய அருவுருவத் திருமேனியே சிறப்பாக, 'இலிங்கம்' என்னும் பெயரால் குறிக்கப்படுகின்றது. சிவனைக் காட்டும் குறியாதலால், 'சிவலிங்கம்' என்றும் சொல்லப்படுகின்றது. சிவபெருமானை வழிபடுவோர் சிறப்பாக இவ்விலிங்கத் திருமேனியிலேதான் வழிபடுதல் வேண்டும்.

சிவபெருமானது இயல்பு, 'சிவம், சத்தி' என இருதிறப்பட்டிருப்பது. இஃது, உருவத் திருமேனிகளாகிய வ்யக்த லிங்கங்களில் ஆண்வடிவும், பெண்வடிவுமாய் வேறுவேறு விளங்கிநிற்கும். வ்யக்தாவ்யக்த லிங்கமாகிய இவ்வருவுருவத் திருமேனியில் பீடம் சத்தியும், இலிங்கம் சிவமுமாய் நிற்கும். அவ்யக்த லிங்கமாகிய அருவத்திருமேனியில் விந்து சத்தியும், நாதம் சிவமுமாகும். எனினும் இவ்வருவுருவத் திருமேனியிலே பீடத்தை விந்துவாகவும், இலிங்கத்தை நாதமாகவும் கருதி அவ்யக்த லிங்க வழிபாடும், மற்றும் உருவத் திருமேனிகளில் அவரவர் அவ்வப்பொழுது விரும்பும் திருமேனியைக் கருதி வ்யக்த லிங்க வழிபாடும் செய்யலாகும்.

அருவம், உருவம் இரண்டிற்கும் இடைநிற்கும் இவ்வருவுருவத் திருமேனி, ஏனைய இரண்டிற்கும் பொதுவாய் நிற்றலால் இது சிறப்பு மிக்கது; இதன் பெருமை சொல்லுதற்கரியது. இவ்விலிங்க வடிவம் சோதியாகிய ஒளிப்பிழம்பே யாகையால், இது ஞானவடிவேயாம். இவ்விலிங்க பூசை செய்யாதவர் சிவபூசகர் அல்லர். உலகப் பொருள்களும், 'அருவம், உருவம், அருவுருவம்' என மூவகையினவாய் இருக்கும். அவை அனைத்திற்கும் மூல முதற்கருவாய் நிற்றல் பற்றி, 'லிங்கம்' என்பதற்குச் சொல்லப்படும் பொருள்கள் இவ்வருவத் திருவடிவமாகிய ஒளிவடிவிற்கே பெரிதும் பொருந்துவதாம். இதனை,

“ காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய்
நீணாகம் அணிந்தார்க்கு நிகழ்குறியாம் சிவலிங்கம் ”

என்று சேக்கிழார் எடுத்தோதினார்.

தேவர், முனிவர், அசுரர், மனிதர், மற்றும் அஃறிணை உயிர்கள் முதலிய யாவரும் வனம், நதிக்கரை, தீர்த்தக்கரை முதலிய பல இடங்களிலும் இவ்விலிங்கத் திருமேனியையே பிரதிட்டை செய்து வழிபட்டதையும், அவர்களுக்குச் சிவபெருமான் இவ்விலிங்கத்திலிருந்து வெளிப்பட்டே வேண்டுவனவற்றை அருள் செய்ததையும் புராணங்களில் நிரம்பக் கேட்கின்றோம். இவற்றால் எல்லாம் இலிங்க வழிபாட்டின் முதன்மை இனிது விளங்கும். எனினும், சிவபிரான் முன்னர் இலிங்க உருவாய்த் தோன்றிப் பின்னர் அதினின்றும் வெளிப்பட்டு அருள்புரிந்த வரலாற்றைப் புராணங்கள் பின்வருமாறு கூறும்.

‘ஒரு நித்திய கற்பத்தின்பின் பிரமதேவன் விழித்தெழுந்து பார்க்கையில் உலகம் என்பதே இல்லாது சூனியமாய் இருக்கக்கண்டு, மீளவும் உலகத்தை முன்போலப் படைத்து அவைகளைப் பார்த்துக் களித்து வருகையில், பாற்கடலில் பள்ளிகொண்டிருக்கும் திருமாலைக் கண்டு தனது செருக்கினால் தட்டி எழுப்பி, ‘ நீ யார் ’ என்று வினவினான். திருமால், ‘ நானே உன் தந்தை ’ என்றார். பிரமதேவன் நகைத்து, ‘ தூக்க மயக்கத்தில் உனக்கு ஒன்றும் தெரியவில்லை; உலகத்துக்கெல்லாம் நானேதந்தை; உனக்கும் நான் தான் தந்தை ’ என்றான். திருமால் சினந்து, ‘ நீ என் உந்திக் கமலத்துத் தோன்றியவன் அல்லையோ ’ என்றார். பிரமன், ‘ நீ ஒருமுறை தூணிலிருந்து தோன்றினாய் ; அதனால், தூண்தான் உனக்குத் தந்தையோ ? நீ பிருகு முனிவர் சாபப்படி எடுத்த பிறப்புக்களை எல்லாம் படைத்தவன் நானல்லனோ ’ என்றான். திருமால், சிவபெருமான் கிள்ளிய உன் தலை ஒன்றை மறுபடியும் படைத்துக்கொள்ளமாட்டாத நீதானோ, என்னைப் பல பிறப்புக்களிலும் படைத்தவன் ’ என்று சொல்ல, பின்பு இருவரும் பலப் பரீட்சை செய்யத் தொடங்கிப் பெரும்போர்புரிந்தனர். அதனால், உலகிற்கு உண்டாகிய துன்பம் அளவிடப்படாததாயிற்று. ஆகவே,

சிவபெருமான் உலகைக் காக்கத் திருவுளங்கொண்டு அவ் விருவர் முன்னே நீண்டதோர் அனற் பிழம்பாய்த் தோன்றி ஞர். அதைக் கண்டு அஞ்சிய இருவரும், 'இதன் அடியை யும், முடியையும் அறிபவரே உயர்ந்தோர்' என்று முடிபு செய்துகொண்டு, திருமால் வராக வடிவங் கொண்டு பூமியை இடந்து சென்று அடியைத் தேடியும், பிரமன் அன்ன உருவங் கொண்டு மேலே பறந்து சென்று முடியைத் தேடியும் பல் லாண்டுகள் கழியவும் காணமாட்டாது மெலிவடைந்து முன் இருந்த இடத்தை அடைந்து செருக்கொழிந்து சிவசோதி யைத் துதிக்க, சிவபெருமான் அதனினின்றும் வெளிப்பட்டுத் தோன்றி அவர்களுக்கு அருள்புரிந்தார்'.

பிரமன் முடியைக் கண்டேன் எனத் தாழம்பூவைச் சான்ருகக் காட்டிப் பொய் கூறிச் சிவபெருமான் சினத்துக்கு ஆளாகிப் பின்னர்ப் பிழைபொறுக்கும்படி வேண்டி அருள் பெற்ருன்' என்ற ஒரு வரலாறும் உண்டு. இவ்வரலாற்றைக் கூறுவது இலிங்கபுராணம்.

இங்ஙனம் சோதிவடிவாய்த் தோன்றியதே, 'இலிங்க மூர்த்தம்' எனவும், அதினின்றும் வெளிப்பட்டு அருளிய வடிவமே, 'இலிங்கோற்பவ மூர்த்தம்' என்றும் சொல்லப்படும். இலிங்கோற்பவர் தோன்றிப் பிரம விட்டுணுக்களுக்கு அருள் புரிந்த மாசி மாதத்து அமரபக்கத்துச் சதுர்த்தசி திதி இரவே, 'சிவராத்திரி' என்றும், அவ்விரவு பதின்மூன்றேமுக்கால் நாழிகைக்குப் பின் மூன்றேமுக்கால் நாழிகை நேரமே, 'இலிங்கோற்பவ காலம்' என்றும் போற்றப்படுகின்றன. சிவபூசை செய்வோர், இவ்விரவு நான்கு யாமும் சிவலிங்க பூசையும், ஏனையோர் சிவலிங்க தரிசனமும் செய்து, ஊண் உறக்கம் இன்றி இருத்தல் வேண்டும். அஃது இயலாதவர், முதல் இரண்டு யாமங்களிலேனும் அவ்வாறு செய்தல் வேண்டும். அதுவும் இயலாதவர், இலிங்கோற்பவ கால மாகிய இரண்டாம் யாமத்தில் மட்டுமேனும் அவ்வாறு செய் யற்பாலர். நான்கு யாமங்களில் இவ் இரண்டாம் யாமமே மிகச் சிறந்தது. இச் சிவராத்திரி தினமும் இது பொழுது. ஆதலால், சிவபெருமானிடத்து அன்புடையார் பலரும் இவ் வுயர்ந்த பொழுதில் இவ்விலிங்க வழிபாட்டில் ஈடுபட்டு இன்புற்றிருத்தல் உறுதி.

உ

குருபாதம்

திருத்தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் வழங்கியருளிய

அருளுரை

நமது மரபு

போனகம் இருக்கின்ற சாலையிடை வேண்டுவ
    புசித்தற் கிருக்கும்; அதுபோல்,
  புருடர்பெறு தருமாதி வேதமுடன் ஆகமம்
    புகலும்; அதில் நாலாம்பயன்
ஞானநெறி முக்யநெறி; காட்சிஅனு மானமுதல்
    நாலு விதங்கள்தேர்ந்து
  நான்நான் எனக்குழறு படைபுடை பெயர்த்திடவும்
    நான்குசா தனமும்ஓர்ந்திட்
டானநெறி யாஞ்சரியை யாதிசோ பானமும்,
    அணுபட்ச சம்புபட்ச
  மாம்இரு விகற்பமும், மாயதி சேவையும்
    அறிந்திரண் டொன்றென்னும்ஓர்
மானத விகற்பமற என்றும்நிற் பதுநமது
    மரபென்ற பரமகுருவே
  மந்த்ரகுரு வேயோக தந்த்ரகுரு வேமூலன்
    மரபில்வரு மௌனகுருவே.

—*தாயுமானவர்.*

ஒவ்வொருவரும், முதலில், 'நாம் யார்? நமது மரபு எது? நம் முன்னோர்கள் யாவர்?' என்று அறிந்துகொள்ளுதல் இன்றியமையாதது. அதன் பிறகு மற்றவர்களைப் பற்றியும், மற்ற பொருள்களைப் பற்றியும் அறிந்துகொள்ளலாம். தங்களைப் பற்றியே அறியாதவர்கள், மற்றவர்களை எல்லாம் பற்றி அறிந்துகொண்டதாகக் கூறுதல் எங்ஙனம் பொருளுடையதாகும்? ஆகாது, இஃது உலகியலைவிட, ஆன்மிகத்துறையில் மிக இன்றியமையாதது.

"தம்மை யுணர்ந்து தமையுடைய தன்னுணர்வார்" என்று மெய்கண்டார், 'முதலில் தம்மை உணரவேண்டும்' என்பதை அறிவுறுத்துகின்றார்.

> "தன்னை அறியார்; தலைவன் றனையறியார்
> முன்னை வினையின் முடிவறியார் - பின்னைக்
> குருக்கள்என்று பேரிட்டுக் கொள்ளுவர்கள் ஐயோ
> தெருக்கள் தனிலே சிலர்"

என்பது எங்கள் ஆதிபரமாசாரியர் வாக்கு.

ஏழைக் குடும்பத்தில் பிறந்த ஒருவன் தன்னை ஒரு செல்வர் வீட்டு மகன் என்று நினைத்துக்கொண்டு ஆடம்பரமாக வாழ முயலுவானாயின், அவன் நிலை என்ன ஆகும்! அதுபோலவே செல்வர் வீட்டு மகன் ஒருவன் தனது செல்வ நிலையை உணராது-அஃதாவது. தங்களுக்கு உள்ள நிலம் எவ்வளவு? அவைகள் எங்கே இருக்கின்றன? அவைகளிலிருந்து எவ்வளவு விளை பொருள்கள் வருகின்றன? தங்களுக்கு வீடுகள் எத்தனை? எங்கே இருக்கின்றன? கைப்பொருள் எவ்வளவு உள்ளது? என்று இவைபோன்றவற்றை அறிந்துகொள்ளாமல், ஒன்றும் அற்றவனைப்போல இருப்பானாயின், அவன் எங்ஙனம் இன்ப வாழ்க்கை வாழமுடியும்? முடியாது, அதுபோலத்தான் சமயத் துறையிலும், 'நமது சமயம் எது? நம் ஆசிரியர் யாவர்? அவர்கள் அருளிச்செய்த நூல்கள் எவை? அவைகளில் என்ன சொல்லப்பட்டிருக்கின்றன? என்று அறியாதிருப்பின், சொல்வார் சொல்வனவற்றை எல்லாம் மெய்யென்று நினைத்து ஏற்றுக் கொள்ளுதல், அல்லது எத்துணைப் பெரியவர்கள் எவ்வளவு நல்லவற்றைச் சொன்னாலும் அவை அனைத்தையும் பயனில்லாதனவாக நினைத்துத் தள்ளிவிடுதல் என்ற நிலை உண்டாகும்.

சமயத்துறையில் உண்மையை உணர்தற்குச் சற்குருவை அடைய வேண்டும். சற்குரு கிடைப்பதற்கு முன்னைத் தவம் வேண்டும். தாயுமானவர் தமது முன்னைத் தவப்பயனால் சற்குரு கிடைக்கப்பெற்றார். அக்குருமூர்த்திகளது திருப்பெயர், 'மௌனகுரு' என்பது, அவர் திருமூலர் மரபில் வந்து திருச்சிராப்பள்ளியில் திருமடம் அமைத்தருளிய 'சாரமா முனிவர்' என்பவரது பரம்பரையில் 17-ஆவது பட்டமாக அத்திருமடத்தில் எழுந்தருளியிருந்தவர். தாயுமானவர் பிறந்து

வளர்ந்து வாழ்ந்த இடம் திருச்சிராப்பள்ளியாய் அமைந்தமையால், அவருக்கு ஸ்ரீ மௌனகுருவின் அருள்பெறும் வாய்ப்பு உண்டாயிற்று.

கல்வி கேள்விகளில் வல்லவராய், உலகியலையும் நன்கறிந்திருந்த தாயுமானவர் தம் குருவினிடம் தமக்கிருந்த பல ஐயங்களையும் பற்றிக் கேட்டு நல்ல விளக்கங்களைப் பெற்றார். அதனால், இறைவனைப் பாடும் தமது பற்பல பாடல்களுக்கிடையே தம் குருவாகிய ஸ்ரீ மௌனகுருவின்மீதும் பத்துப் பாடல்களைப் பாடியுள்ளார். அவைகள், 'மௌனகுரு வணக்கம்' என்னும் தலைப்பின்கண் விளங்குகின்றன. அவைகளில் மௌனகுரு தமக்குச் செய்த அருட்செயல்கள் பலவற்றைப் பலவகையாக விரித்துப் பாடியுள்ளார். அவைகளில் சித்தாந்த சைவர்களாகிய நமது மரபு எத்தகையது என்று குருமூர்த்திகள் உணர்த்திய அருள் விளக்கமும் ஒன்று. அதனை அவர் விளக்கிப் பாடியுள்ள பாடலே முதலில் தரப்பட்டது.

சிவநெறியாகிய சைவத்திற்கு, திருநெறி, பெருநெறி, ஒளிநெறி என்பன முதலாகப் பல பெயர்கள் உண்டு. அவைகளில், 'பெருநெறி' என்பது,' எல்லாவற்றையும் தன்னுள் அடக்கியுள்ள நிறைவான சமயம் எனப் பொருள் தரும். சிற்சில சமயங்களில் உயிர் நலத்திற்கு வேண்டுவன பலவற்றுள், ஒன்றிரண்டு பொருள்களே இருக்கும். அஃதாவது, 'சிவ காருணியம்' எனப்படுகின்ற, உயிர்களின்மேல் இரக்கம், கைம்மாறு கருதாது பிற உயிர்கட்கு நலம் செய்தலாகிய அறம், புலனடக்கம், நோன்பு, நல்லார் இணக்கம், கடவுள் வழிபாடு, அடியார் வழிபாடு, தத்துவ உணர்ச்சி இப்படி உயிர் நலத்துக்கு வேண்டிய பொருள்கள் எத்துணையோ உள்ளன. அவற்றுள் ஒன்றிரண்டை மாத்திரமே சில சமயங்கள் கொண்டிருப்பதுடன் ஏனையவற்றை இகழவும் செய்கின்றன. ஆனால், சைவ சமயம், யார் யார் எந்த எந்தப் பொருளுக்கு உரியவராய் இருக்கின்றனரோ அவரவர் அந்த அந்தப் பொருளைப்பற்றி உய்தி பெறுமாறு அனைத்தையும் தன்னகத்துக் கொண்டு விளங்குகின்றது. அது பற்றியே அது, 'பெருநெறி' எனக் குறிப்பிடப் படுகின்றது.

சைவ சமயத்திற்கு முதல் நூலாய் விளங்குகின்ற வேத சிவாகமங்கள் மேற்சொல்லப்பட்ட அனைத்தையும் கூறுவன.

வேதம் குறிப்பாகவும், பொதுவாகவும் கூறும்; ஆகமம் வெளிப் படையாகவும், சிறப்பாகவும் கூறும். அதனால், சைவம், சிவாக மத்தைச் சிறப்பு நூலாகக் கொண்டுள்ளது. சிவாகமத்தையே 'சைவம்' என்று சொல்வது உண்டு. எல்லாப் பொருள் களையும் முற்றக்கூறும் வேத சிவாகமங்களின் பெருமையை அருணந்தி சிவாசாரியர் தமது சிவஞானசித்தியில்,

" அருமறை, ஆகமம் முதல்நூல் அனைத்தும்உரைக் கையினால்
அளப்பரிதாம் அப்பொருளை அரனருளால் அணுக்கள்
தருவர்கள்பின், தனித்தனியே தாமறிந்த அளவில்,
தர்க்கமொடுத் தரங்களினால் சமயம் சாதித்து "

என்றும்,

" வேதநூல் சைவநூல் என்றிரண்டே நூல்கள் ;
வேறுரைக்கும் நூல்இவற்றின் விரிந்த நூல்கள் ;
ஆதிநூல், அநாதிஅம லன்தருநூல் இரண்டும் ;
ஆரண நூல் பொது ; சைவம் அருஞ்சிறப்பு நூலாம் "

என்றும் விளக்கியுள்ளார். வேத சிவாகமங்களின் வழியே சைவ சமயம் எல்லாப் பொருள்களையும் தன்னுட் கொண்டு விளங்குகின்ற சிறப்பினையும் அவர்,

" ஓதுசம யங்கள்பொருள் உணரும் நூல்கள்
ஒன்றோடொன் றொவ்வாமல் உளபலவும் இவற்றுள்
யாதுசம யம்? பொருள்நூல் யாது? இங்கென்னின்,
இதுஆகும் ; இதுஅல்லது எனும்பிணக்க தின்றி
நீதியினால் இவையெல்லாம் ஓரிடத்தே காண
நின்றதுயா தொருசமயம், அதுசமயம் ; பொருள்நூல் ;
ஆதலினால் இவையெல்லாம் அருமறை ஆகமத்தே
அடங்கியிடும் ; அவைஇரண்டும் அரன்அடிக்கீழடங்கும் "

என்று விளக்குகின்றார். இவ்வாறு வேத சிவாகமங்களின் வழியே சைவ சமயம் எல்லாப் பொருள்களையும் உடையதாய் இருத்தலைத் தாயுமானவர், விருந்தினரை நல்ல வகையில் உபசரிப்பதற்கு அமைத்த ஓர் உணவுச் சாலையில், நால்வகை உண்டிகளும், அறுவகைச் சுவைகளோடு நிரம்ப அமைக்கப் பெற்றிருப்பதற்கு ஒப்பாக வைத்து, " போனகம் இருக்கின்ற சாலைதனில் வேண்டுவ புசித்தற் கிருக்கும் அதுபோல்' என்று கூறுகின்றார்.

உணவு வகையில் சிலர் இனிப்பை விரும்புவர்; சிலர் கார்ப்பை விரும்புவர்; சிலர் புளிப்பை விரும்புவர்; சிலர் கசப்பை யும் விரும்புவது உண்டு. இன்னும் சிலர் மென்மையாக நெகிழ்ந்திருக்கும் உணவையும், சிலர் வன்மையாக வற்றி யிருக்கும் உணவையும், சிலர் பருகும் உணவையும் விரும்பு வார். அதனால், பலரையும் உபசரிப்பதற்கு அமைத்த உணவுச் சாலையில் இவை அனைத்தும் இருத்தல் இன்றியமையாததே. சைவ சமயம் இவ்வாறு அமைந்த உணவுச் சாலைதான் என்கின்றார் தாயுமானவர். எனவே, இத்தகைய நல்ல ஓர் உணவுச்சாலை இருக்கவும், அதனுட் சென்று தமக்கு வேண்டியவற்றை உண்ணாது சிலர் பசியினாலும், தாகத்தினாலும் வருந்துவார்களாயின், அஃது அவர்கள் குற்றமன்றி, உணவுச் சாலையின் குற்றமன்று.

உணவுச் சாலையில் எல்லாம் இருப்பதுபோல, சைவ சமயத் தில் உள்ளவை எவையெனில், புருடார் பெறு தருமாதி; அவை அறம். பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு. இந்நான்கில் ஒவ்வொருவர் ஒவ்வொன்றை விரும்புவர். ஆயினும், நான்கினை யும், ‘புருடார்த்தம் - மக்கள் பெறத்தக்க பொருள்’ என்று கொண்டு அவைகளை அடைதற்குரிய வழியைக் கூறுகின்றன வேதாகமங்கள். சில மதங்கள், பொருள் இன்பங்களை வேண்டத் தகாத பொருள் என்று ஒதுக்கி, ‘அறம், வீடு’ என்பவற்றைப் பற்றி மட்டுமே கூறும். மற்றும் சில மதங்கள், ‘அறமும் இல்லை, வீடும் இல்லை’ என்று சொல்லி, பொருளையும், இன்பத் தையும் மட்டுமே கூறும்.

அறம் முதலிய நான்கினையும் வேதாகமங்கள் கூறினும் அவைகளில் நாலாவதாகிய வீடுபேறே சிறப்புடையது எனக் கூறி, அதனை அடைதற்குரிய ஞானத்தையே, சிறந்தெடுத்து விளக்கும். உண்மை ஞானம் உண்டாதற்கு முதற்கண் அளவை அறிவு வேண்டும். அளவை, ‘காட்சி, அனுமானம், ஆகமம்’ என மூன்று வகைப்படும். மற்றைய அளவைகள் யாவும் இம் மூன்றின் விரிவே. மூன்று அளவைகளுள் சில மதங்கள் ஒன்று இரண்டை மட்டுமே கொள்ளும். சைவ சமயம் மூன்று அளவைகளையும் கொண்டு விளங்குவது. மூன்று அளவை களாலும் உண்மையை நன்குணர்ந்து, ‘நான்’ என்னும் முனைப்பு அறுதற்கு, ‘சரியை. கிரியை, யோகம், ஞானம்’

என்னும் நால்வகைச் சாதனங்களையும் விளக்குவது சைவ சமயம்.

நால்வகைச் சாதனங்களில் ஞானமே முத்திக்கு நேர்ச் சாதனம். அதனால், ஏனைய மூன்றும் ஞானத்தை அடைதற்கு உரிய சோபானங்கள் - படிகள். சைவ சமயத்தில்தான் இச் சிறந்த சாதனங்கள் உள்ளன.

கடவுள் நெறியில் பல தெய்வக்கொள்கைகள் இருப்பதும், அவைகளுள் ஒன்றைப்பற்றிக் கொண்டு ஏனையவற்றை ஒதுக்கு வதும் யாவரும் அறிந்தவை. சைவ சமயம் 'அணுபட்சம், சம்புபட்சம்' என்பவற்றால் அனைத்துத் தெய்வங்களையும் தழுவி நிற்கும். அணு - ஆன்மாக்கள். சம்பு - இறைவன்.

ஆன்ம வர்க்கத்தில் உள்ளவர்கள் புண்ணியங்களை நிரம்பச் செய்து இறைவனது திருவருளைப்பெற்று, அவனது ஐந்தொழில் களிலும், பிறவற்றிலும் ஒவ்வொன்றைப் பெற்று விளங்குவர். அவ்வாறு விளங்கும் இந்திரன் முதலிய கடவுளரும், மால் அயன் முதலியோரும் அணுபட்சக் கடவுளர், இவர்களிடத்தில் தனது அதிகார சத்திகளில் ஒவ்வொன்றை வைத்து அச்சத்தி யோடு இறைவன் தானும் இயைந்து நீக்கமின்றி நின்று அவ்வத் தொழிலையும் நடாத்துவிப்பன். அந்நிலையே 'சம்பு பட்சம்' என்று சொல்லப்படும். அணுபட்சக் கடவுளரையே கடவுளாக நினைத்து வழிபடுவோர், பின் அவ்வக்கடவுளர் உலகையும், அனைத்துக் கடவுளரையும் சம்புபட்சமாக நினைத்து வழிபடு வோர் ஞானத்தையும் அடைவர். இவைகளையெல்லாம் சைவ சமயத்திலன்றிப் பிற சமயங்களில் தெளிவாக உணர்தல் இயலாது.

இவைகளையெல்லாம் நன்கு உணர்ந்தால் மாயையின் காரிய மாகிய உலகம் எவ்வாறு நடைபெற்று வருகின்றது என்பதும் அஃது எவ்வாறு உயிர்கட்குப் பயன்படுகின்றது என்பதும் இனிது விளங்கும். அப்பொழுது தன்னையும் தலைவனையும் அறிந்து இருவரும். இரண்டும் இன்றி ஒன்றும் இன்றி அத்துவித மாய் அவனே தானாய் தன்னை இழந்து நிற்கும் ஆனந்தாதீத நிலை உண்டாகும், இம்முறையிலே இந்நிலையிலே நிற்பதுதான் நம்மரபு சித்தாந்த சைவம் என்று எனக்கு உபதேசித் தருளிய பரமகுருவே, ஞானயோகத்தை உணர்த்தும் ஞான

குருவே, திருமூலர் மரபில் வந்த மௌனகுருவே, என்று அழைத்துத் தம் ஞானகுருவை வணங்குகின்றார் தாயுமானவர்.

மற்றும் அவர், 'காட்டு யானையை அங்குசத்தால் அடக்கி வீட்டு யானையாக்கும் பாகன்போல நீர் உமது சின்முத்திரையாகிய அங்குசத்தால் என்னை அடக்கி ஆண்டு, 'சிந்தை அறநில்' என்று சும்மா இருக்க வைத்தீர்; சிவஞானசித்தி நெறியை உபதேசிக்கும் உமது நந்தி மரபு வாழ்க! முன்பு என்னை அடக்கி ஆண்டதுபோல, இனியும் இந்த உலக மாயையை வெல்ல வழிசொல்ல வேண்டும். இல்லாவிடில், முன்புபோல 'நான் உலகாயத மதமே மெய் என்று எண்ணிவிடும் நிலை உண்டாகி விடும்; புருடனாய்ப் பிறந்தும் புருடார்த்தத்தைப் பற்றியே கனவிலும் நினையாதிருந்த எனக்கு உமது அருளே தாரகமாயிற்று. இன்னும் ஆணவம் என்னை எதிர்த்துப்போராடுகின்றது; இதை வெல்வதற்கு நீர் சொல்லிய ஒருவார்த்தையைத் தான் நான் மலையிலக்காக நம்பியிருக்கின்றேன்' என்றெல்லாம் தம் குருவினிடம் விண்ணப்பிக்கின்றார்.

தம் குருவின் சந்நிதியில் புலியும், பசுவும் குலாவி விளையாடுமாம்; யானை அவர் கைகாட்டியபடி தொழில் செய்யுமாம். தேவர் உலகத்திலுள்ள காமதேனுவும் அவருக்குப் பணிவிடை புரியுமாம். இப்படிப்பட்ட உமது கொலுமுகத்தில் அடியேனை அருகில் வா என்று அழைப்பது எந்நாளோ' என்று தமது குருவின் பெருமையையும், குருபக்தியையும் தெரிவிக்கின்ற அடிகளது அனுபவப் பாடல்களை ஓதினால், அனைவரும் குருவருளுக்கும் திருவருளுக்கும் உரியவராகலாம்.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Vaithianathaswami Devasthanam, Vaithiswarankoil.

Dharmapuram Adheenam has the unique distinction of preserving and ever improving the Devasthanams. They are managed efficiently.

(Sd.) K. Veeraswamy,
Judge, High Court,
Madras.

25—2—67.

தோட்டத்து மாம்பழம்

சி. அ.

'பழம்' என்றால் நாவில் நீர் ஊறுவதும், 'காய்' என்றால் முகம் வாடிவிடுவதும் இயற்கை. ஒரு காரியத்தைப்பற்றிச் சென்றவர் திரும்பி வருவாரேயானால், அவர் சென்றதைப்பற்றி அறிய விரும்புபவர்கள், அவரை, 'காயோ? பழமோ?' என்று கேட்பது நம்மிடையே உள்ள ஒரு வழக்கம். அவரும் அக் காரியம் நல்ல வகையில் முற்றுப்பெற்றிருந்தால், 'பழந்தான்' என்று உடனே தயங்காது மறுமொழி சொல்வார். அக்காரியம் முற்றுப்பெறாவிட்டால், தெளிவாக ஒன்றையும் சொல்லாமல் முணுமுணுப்பார். இவற்றிலிருந்து, பழத்தின்மேல் நம் மக்களுக்கு எவ்வளவு விருப்பம் உள்ளது என்பது தெரியவரும்.

"கனி தந்தால் கனி உண்ணவும் வல்லிரே" என்று கேட்கின்றார் அப்பர். 'கனிகளில் சிறந்தவை முக்கனிகள்' என்று சொல்வார்கள். 'வாழை, மா, பலா' என்பவை முக்கனிகள். இவைகளில் பலாப்பழத்தை ஒருவர் முழுவதும் உண்ணுதல் இயலாது. அப்பர் தரும் பழம் அத்தகையபழம் போலும்! அதனால் தான் அவர் அவ்வாறு கேட்கின்றார். வாழைப்பழம் எளிதில் உண்ணத்தக்க ஒன்று; எப்பொழுதும் கிடைப்பது; அதன் சுவையும் பொதுவானதே. இந்த இரண்டிற்கும் நடுநிலையாய் நிற்பது மாம்பழம். அதனால், இதனை மக்கள் பெரிதும் விரும்புவர்.

தோட்டங்களில் மிகவும் கருத்தாகப் பாதுகாக்கப்படுவது மாம்பழமே. நல்ல சுவையுடையதாய் அழகாகப் பழுத்திருக்கும் மாம்பழம், பார்க்கும்பொழுதே கண்ணைப் பறிக்கும்; கருத்தைக் கவரும். ஆனால், அது நல்ல வேலி அமைந்த தோட்டத்திற்குள், மிக்க பாதுகாப்பில் இருப்பதால், அதனை உடைய உரிமையாளர் இசைவில்லாமல் அதைப் பிறர் ஒருவரும் அடைய இயலாது. ஆகவே, மாம்பழத்தைப்பெற உரிமையாளர் இசைவைப்பெற வேண்டும். அஃது எப்படி?

முதலில் தோட்டத்தைக் காவல்புரியும் காவற்காரரை அணுகவேண்டும்; அணுகி அவருக்குப் பணிவான வார்த்தைகள் பல சொல்லி, அவரது தயவைப்பெற வேண்டும். பின்பு அவர் தம்மிடம் வந்தவரைத் தலைவரிடம் அழைத்துச்சென்று அறிமுகப் படுத்தித் தோட்டத்தில் உள்ள பழத்தைப் பறித்துக்கொடுப்பார். தலைவர் ஒரு வள்ளலாக இருந்தால், தோட்டத்தில் பழம் உள்ள நாள்வரையில் வேண்டியபொழுது பழத்தைப்பெற்று உண்ண லாம். ஆனால், எப்பொழுதும் தோட்டத்தின் காவலரையோ அல்லது வேறு வாயிலாளர்களையோ அணுகித்தான் ஆகவேண் டும். அவர்கள் கைவிட்டுவிடுவார்களாயின், பின்பு பழத்தை நினைத்து ஏங்கவேண்டுவதுதான்.

தோட்டத்தில் உள்ள பழங்களைச் சிலவேளைகளில் காட்டில் உள்ள நரிகள் புகுந்து தின்பது உண்டு. 'திராட்சைக் கொடி யில் உயரத்தில் இருந்த பழக்குலை ஒன்றை நரி ஒன்று கௌவிச் செல்வதற்கு எட்டி எட்டிக் குதித்தும் முடியாமல் திரும்பிப்போய் விட்டது' என்று ஒரு கதை உண்டு. காவற்காரர்கள் சோம்பல் உடையவர்களாய் இருக்கின்ற தோட்டத்தில்தான் நரிகள் நுழைய முடியும். அவர்கள் விழிப்புள்ளவர்களாய் இருந்தால், நரிகளோ அல்லது நரிபோன்றவர்களோ உள்ளே நுழைய முடியாது. வெளியிலே இருந்து பழத்தைப் பார்த்து ஏங்குவ தோடு அவர்கள் செயல் முடிந்துவிடும். காவற்காரர் தயவை முன்பு பெற்றுப் பின்பு இழந்தவர்கள் நிலையும் இதுதான். இவ்வுலக நிகழ்ச்சியை வைத்துத் திருமூலர் ஒரு பாடலை அருளுகின்றார்.

" தோட்டத்தில் மாம்பழம் தோண்டி விழுந்தக்கால்,
நாட்டின் புறத்தில் நரிஅழைத் தென்செய்யும்!
மூட்டிக் கொடுத்து முதல்வனை முன்னிட்டுக்
காட்டிக் கொடுத்தவர் கைவிட்ட வாறே. "

ஒரு பெரிய தோட்டத்தில் நல்ல மாம்பழம் ஒன்று தோண்டி அளவு பெரியதாய்ப் பழுத்துள்ளது. அது கிளையில் உயரத்தி லும் இல்லாமல் கீழே விழுந்து கிடக்கின்றது. இது வெளியே மறைந்து வசிக்கின்ற நரிகட்குத் தெரியவந்தது. இரவு வந்தது; ஊரும் அடங்கிவிட்டது; ஆனால் காவற்காரர் விழிப்பாய் இருக் கிறார். அவைகள் என்ன செய்யும்? எல்லா நரிகளும் ஒன்று சேர்ந்து கூப்பாடு போட்டன; அதற்குமேல் அவைகள் என்ன செய்யமுடியும்?

பெரிய தோட்டம், 'சிதாகாசம்' எனப்படுகின்ற ஞான வெளி. அதில் உள்ள பெரிய மாம்பழம், சிவானந்தம். இதனை உடைய தலைவர் சிவபெருமான். இப்பழம் எதிலும் ஒட்டிக் கொண்டிருக்கவில்லை. எங்கும் பொங்கித் ததும்பிப் பூரணமாய் ஏக உருவாய்க் கிடக்கின்றது; சிவபெருமானாகிய தலைவரும், பெரிய அருள் வள்ளல். இந்த மாம்பழம் எக்காலத்திலும் உள்ளது. பாசம் என்கின்ற வேலி அதை அணுகவொட்டாமல் தடுத்துக் குறுக்கே நிற்கின்றது. அதைக் கடந்து செல்வதற்கு, 'ஞானம்' என்கின்ற ஒரு வழியே உள்ளது. அந்த வழியில் அழைத்துச்சென்று முதல்வராகிய சிவபெருமானிடத்தில் காட்டி அவருக்கு உரியவராகக்கொடுக்கும் வாயிலாளர் ஞானகுருவே. அவரது அருள் இல்லாமல் அந்த வழியில் சென்று அப்பெருமானைக் காணுதல் இயலாது. ஞானகுருவையே அறியாதவர்கள், ஞான நூல்களை மட்டும் படித்துச் சிவானந்தத்தைப்பற்றிப் பெரும் பேச்சுக்கள் பேசிக்கொண்டிருப்பார்கள். ஆனால், அவர்கள் பேச்செல்லாம், தோட்டத்தின் உள்ளே செல்ல மாட்டாத நாட்டுப்புறத்து நரிகளின் கூப்பாடுபோலத்தான் அமையும். ஞானகுருவை அடைந்தவர்கள் ஞானத்தின் வழியே சிவத்தைக்கண்டு சிவானந்தத்தைப்பெற்று மகிழ்வார்கள். அதைப் பெற்றபின்பும் குருலிங்க சங்கமங்களைச் சிவனெனவே கண்டு வழிபடுகின்றவர்களே, அச்சிவானந்தத்தை நிலையாகப் பெற்று அனுபவிக்க முடியும். இல்லையேல் குருலிங்க சங்கமங்களால் கைவிடப்பட்டுச் சிவானந்தத்தையும் இழக்க நேரிடும். இவர்களது நிலை, மாம்பழத் தோட்டத்திற்கு வாயில்காவலராய் இருப்பவரால் கைவிடப்பட்டவர் நிலைபோன்றதுதான். இந்த நுண்ணிய ஞானச் செய்தியைத் திருமூலர், தோட்டத்து மாம்பழச் செய்தியில் வைத்து மிக அழகாக அருளியுள்ள இத்திருமந்திரத்தின் சுவையில் ஈடுபடுவோமாக.

" ஒருகோடி ஆகமங்கள் எல்லாம் உணர்ந்தும்
பெருகுதவம் சித்தியெல்லாம் பெற்றும் — குருவருளால்
வைத்த படியிருக்க மாட்டாத மாந்தர்க்குச்
சித்தசல னம்மாந் தினம். "

—ஸ்ரீகுருஞானசம்பந்தர்.

அப்பர் அருள் முரசு

செஞ்சொற்கொண்டல், வித்துவான்,

திரு. சொ. சிங்காரவேலன் M. A.. Dip. Ling.

(மலர் 26, இதழ் 3, பக்கம் 153 இன் தொடர்ச்சி)

மொழிநிலை

116. ஆரியமா ? தமிழா ? அவற்றின் இசையா ? அனைத்தும் அவனே. கூரிய குணம் உடைய பெரியோர் குறிப்பில் நிற்பவன் அவன் ; அம்மையொருபாகன், சென்றடைந்து உய்வீர்களாக. *(1216)*

என் கடன் பணி

117. அவன் கடன் அடியேனையும் தாங்குவது ; என் கடனே பணிசெய்து, கிடப்பதுவேயாகும். *(1262)*

உயிர்களின் எல்லை

118. இந்த விரிந்த உலகத்தில் எண்ணிறந்த உயிர்கள் உள்ளன. இவற்றுக்கெல்லாம் எல்லை எது ? அந்த எல்லை எங்கு உள்ளது ? ஆம் ; எம்பெருமானே உயிர்களுக்கெல்லாம் எல்லை ஆகியவன். *(1270)*

என்னினும் இனியவன்

119. என்னைவிட எனக்கு வேறு யார் இனியவர் உள்ளார்? ஆனால் என்னைவிட எனக்கு இனியவன் ஒருவன் இருக்கின்றான் ; என் உள்ளத்துள்ளே ஒளிந்து நிற்கும் அத்தலைவன், என் மூச்சுக்காற்றாய் வெளிவந்தும் உட்புகுந்தும் என்னை வாழ்வித்த படி என்னுள்ளே நிற்கின்றான். *(1275)*

கீழ்க்கணக்கு

120. இறைவனைத் தொழுது பூக்களைத் தூவி அழுது அரற்றுகின்றார்கள் பலர் ; பொழுதுபோக்கிப் புறக்கணிப்பார்

பலர்; இவர்களையெல்லாம் கணித்துவரும் பேரேடு இறைவன் கைகளில் இருக்கின்றது. (1282)

உணர்க

121. விரும்பியபடியெல்லாம் செயல் புரிந்து காலத்தைக் கழிக்காதீர்கள்; உள்ளத்துக்குள்ளே இருக்கும் ஒருவனை உணருங்கள்; அந்த உணர்வே நிலையான இன்பந்தரவல்லது. (1292)

அச்சமும் அன்பும்

122. நெஞ்சே! பயந்து இறைவனை நினை! அல்லது அன்புகொண்டாவது நினை! நற்பயன் விளையும். (1303)

சுழிக்குள் சிக்கினல்

123. உள்ளம் என்பது ஒரு நீர்நிலைபோன்றது. அதிலே வஞ்சனை என்னும் பயங்கரச் சுழிக்குள்ளே நான் அகப்பட்டு உயிர்துறக்கும்போது, இறைவா! நின் திருப்பெயர் வந்து தோன்றி என்னைக் காத்தருளுமாக. (1337)

தேனறு

124. தேன் ஆறுகப் பெருகி ஓடிவந்து பாயுமானல் எப்படி? அப்படியே நான் ஐயாற்றில் அவன் இன்னருளை அநுபவித்தேன். (1343)

ஓட்டை மாடம்

125. இந்த உடம்பு ஒரு ஓட்டை மாடம்; இதற்கு ஒன்பது வாசல்கள். இவை கழுகுகளால் அரிக்கப்பட்டுச் சிதைவதற்கு முன்பே கைகளால் தொழுது கருத்தால் அழுது நிற்கும் அன்பர்க்கு அவன் அன்பன். (1382)

பிறகு என்பது இல்லை

126. தன்னைத் தொழும் அடியார்களுக்குப் 'பிறகு பார்க்கலாம்' என்று ஒருபோதும் இறைவன் உரைப்பதில்லை. அவன் எப்போதும் அருள்புரிவதற்குக் காத்திருக்கின்றான். (1449)

மனவழிபாடு

127. இறைவன் திருவடி ஏத்தும் பேறு பெற்ருல், இந்தக் கொடிய மனிதப் பிறவியில் வேருெரு குறையும் எமக்கில்லை; தேவர் வாழ்வும், தேவர் உலகத்துச் செலவும் கண்டு வீற்றிருக்கும் கருத்தும் எமக்கு இல்லை; மனங்கலந்த வழிபாடு ஒன்றே வேண்டுவது. (1458)

நுண்ணுணர்தல்

128. நுண்மையாக உணர்ந்தவர்கட்குப் புறத்தோற்றமும் கருவிகளும் எதற்கு ? கோல், புல், கூர்ச்சம், தோல் எனுமிவற்றையெல்லாம் சுமந்து என்ன பயன் ? உணர்வின்கண் ஒன்றுதலொன்றே பயன்தரவல்லது. (1463)

என்றும் இன்பம்

129. நாள்தோறும் நம்வினைபோய் ஒழியும்; என்றென்றும் இன்பம் தழைக்க நாம் இருக்கலாம்; வழிபாடு புரிக. (1486)

துன்ப நீங்க

130. பொய்யே பேசிப் பேசிப் பொழுதைக் கழிக்காதீர்கள். அதனுல் துக்கந்தான் உண்டாகும். துக்கம் நீங்கவேண்டுவதாலுல் துணையென இறைவன் திருவடிகளையே நம்புங்கள். (1497)

பக்தி வெள்ளம்

131. ஐந்து பூதங்களாகிய வலையிற்பட்டு வாடுவதற்கு அஞ்சினேன் நான்; அழகனை என் நெஞ்சில் நினைந்தேன். உடனே வஞ்சனை ஆறுகள் வற்றிவிட்டன; என்ன அற்புதம்! பக்தி வெள்ளம் நெஞ்சுக்குள்ளே பெருக்கெடுத்தது. (1509-11)

அவன் அருள்

132. பண்ணில் ஓசை, பழத்தினில் இன்சுவை; பெண்ணும் ஆணும் ஆகிய பெருந்தகவு; நிறமற்றவன்; உருவமற்றவன்; கண்ணின் மணியானவன் அவன். (1544)

இருவகை இன்பம்

133. இரண்டுவகைப்பட்ட இன்பங்கள் உள்ளன. ஒன்று கீழ்நோக்கியது; மற்ருென்று மேல்நோக்கியது. முன்னது ஊன்

நோக்குவது. பின்னது வான் நோக்குவது. நிலைத்த இன்பத்தைத் தேடி அடைய நாட்டம் கொள்ளுங்கள். (1560)

பாத்திரம் சிவம்

134. இழிந்தவர்களே! சாத்திரம் பல பேசுகின்றீர்கள்; கோத்திரமும் குலமும் கொண்டு என்ன செய்யப்போகின்றீர்கள்? பணியத்தக்கது பரம்பொருள் சிவமே; இந்த உறுதி மட்டும் உங்களுக்கிருக்குமானால் ஒரு மாத்திரைப் பொழுதில் வந்து அருளுவான் இறைவன். (1674)

தலையான மனிதர்

135. மனிதர்களில் தலையான மனிதர்கள் என்று மதிக்கத் தக்கவர்கள் சிலர். ஐயுறுது, இறைவனைத் தெளிந்தவர்களே அவர்கள்; அவர்கள் மனம் கனிந்திருக்கும்; கண்ணீரைப் பொழியும் கண்கள்; புனிதமான இறைவனைப் போற்றுதலைத் தவிர வேறொன்றறியமாட்டார்கள் அத்தகு மனிதர்கள். (1727)

செத்தபோது

136. தேடிவைத்த செல்வம், மனைவி, மக்கள் எல்லாம் நீர் செத்தபோது என்ன பயன் செய்யும்? எல்லாரையும் பிரிதல் வேண்டும்; ஆதலின் அப்போது இறைவன் அடி ஒன்றே துணை. அந்தச் சித்தம் வருமானால் நீர் சிவகதிசேர்தல் திண்ணம். (1790)

அஞ்சுவது ஏன்?

137. விண்ணும் மண்ணும் கூடி நடுக்கமுற்றால் என்ன? உலகத்து மன்னரெல்லாம் கூடி எதிர்ந்தால்தான் என்ன? அப்பனுர் உளர். அஞ்சுவது ஏன்? (1844)

திருவடி நிழல்

138. எங்கும் கிடைக்காத ஒப்பற்ற இன்பம் இறைவனை எண்ணினுலேயே கிடைக்கும். (1849)

காட்சி பெற

139. என் தலைவன் திருவடிநிழல் வீணையின் இசையாய் - மாலை மதியின் நிலவாய் - வீசு தென்றலின் இனிமையாய் - இளவேனில் நலங்களாய் - வண்டு பண்பாடும் தண்ணிய பொய்கையாய் எனக்கு இன்பம் தருவது. (1954)

(தொடரும்.)

சித்தாந்த விஞவிடை

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், சித்தாந்தக் கலைமணி,
மகாவித்துவான்.

திரு. சி. அருணைவடிவேலு முதலியார்

(மலர் 26, இதழ் 3, பக்கம் 141 இன் தொடர்ச்சி)

கன்ம மலம்

வினையுண்மை

மாணுக்கன் ; ஆணவ மலத்தின் இயல்புகளை விளக்கமாக அருளிச்செய்தீர்கள் ; கன்ம மலத்தைப் பற்றியும் விளக்கியருள வேண்டும். உயிர் அறிவுடையதாதலின், அதற்கு அறியாமையுளதாதல் பற்றி, அவ்வறிவை மறைக்கின்ற ஆணவ மலம் உண்டு என்பது பெறப்படுகின்றது. அதுபோல, 'கன்மமலம்' என்கின்ற வினை உண்டு என்பது எங்ஙனம் பெறப்படுகின்றது?

ஆசிரியர் : எல்லா உயிர்களும் விரும்புவது இன்பத்தையே. அங்ஙனமாகவும், அவைகளுக்குத் துன்பம் வருவது ஏன் ?

மாணுக்கன் ; அவை இன்பம் கருதிச் செய்யும் முயற்சிகளில் தவறு நேர்ந்தால், துன்பம் வருகின்றது. எனவே, அத் தவறு தான் துன்பத்திற்குக் காரணமன்ருே ?

ஆசிரியர் : முயற்சியில் தவறு உண்டாதற்குக் காரணம் என்னை ?

மாணுக்கன் ; அப்பொழுது உள்ள சூழ்நிலைதான் தவற்றுக்குக் காரணம்.

ஆசிரியர் : சிலருக்குத் தாம் தொடங்கும் செயல் எதுவாயினும் அஃது இனிது முற்றுப் பெறுவதற்குரிய சூழ்நிலைகளே தொடர்ச்சியாக அமைய, சிலருக்கு அவ்வாறின்றி, தாம் தொடங்கும் செயல் அனைத்தும் தடைப்படுவதற்குரிய சூழ்நிலைகளே அமைவானேன் ?

அன்றியும், ஒருவருக்கே சிலகாலம் தொடர்ச்சியாக நல்ல சூழ்நிலைகள் அமைந்துவந்து, பின்பு சிலகாலம் தீமையான சூழ்நிலைகளே அமைவானேன்? இவைகளால், இன்பத் துன்பங்களுக்குச் சூழ்நிலைதான் காரணமாயினும், அச்சூழ்நிலையின் அமைப்பிற்குக் காரணம் வேறொன்று உள்ளது என்பது தெளிவாகின்றதன்றோ! அந்தக் காரணந்தான் வினை அல்லது கன்மம்.

இன்னும்,

" முயற்சி திருவினை ஆக்கும்; முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும் "

என்றபடி, 'முயற்சியுடையவர் செல்வத்தையும், முயற்சி இல்லாதவர் வறுமையையும் அடைவர்' என்பது ஒரு பொது விதி. அந்தப் பொதுவிதி சில இடங்களில் மாறுவதைக் காண்கின்றோம். அஃதாவது, இரவு பகலாக உழைப்பவர் வறுமையில் வாடுவதையும், சிறிதும் உழையாதவர் செல்வத்துடன் இன்புறுவதையும் காண்கின்றோம். அதனால், முயற்சியும், முயற்சி இன்மையும் மட்டும் செல்வத்திற்கும், வறுமைக்கும் காரணங்கள் அல்ல என்பது பெறப்படுகின்றதன்றோ?

மாணாக்கன் : ஒரு சிலர்க்குப் பிறப்பிலேயே முன்னோர் தேடிவைத்த செல்வம் கிடைத்துவிடுகின்றது; அதனால், முன்னோரது முயற்சி அவர்களுக்குப் பயனைத் தருகின்றது. ஆகவே, அங்கும் முயற்சிதான் நன்மை அளிக்கின்றது,

ஆசிரியர் : அஃது உண்மை. ஆனால், ஒருவர் செல்வக் குடும்பத்தில் பிறந்து, முயற்சியின்றிப் பிறப்பிலே செல்வராய் விளங்க, மற்றொருவர்க்கு அந்த வாய்ப்பில்லாது போதற்குக் காரணம் யாது?

மாணாக்கன் : அஃது ஏரல் எழுத்தும், (சங்கு கிளிஞ்சில் முதலியவை ஊர்ந்து செல்வதனால் உண்டாகுங் கோடுகள், சில வேளைகளில், கற்றவர் எழுதும் எழுத்துப்போல அமைந்துவிடுவதும்) கிழக்குக் கடலில் எறியப்பட்ட கழி ஒன்று, மேற்குக் கடலில் எறியப்பட்ட நுகத்தடியின் துளையில் சென்று கோத்ததும் போன்ற ஓர் இயற்கை நிகழ்ச்சியாகாதோ?

ஆசிரியர் : அவ்விரண்டு நிகழ்ச்சிகளும் அரிய நிகழ்ச்சிகளேயன்றி இயற்கை நிகழ்ச்சிகள் அல்ல. இயற்கைக்கும், செயற்கைக்கும் வேறுபாடு, காரணம் உடையதாகாமையும், காரணம்

உடையதாதலுமேயாம். ஏரலெழுத்து சங்கு முதலியவை, கருதி எழுதாவிடினும், 'ஊர்தல்' என்னும் காரணத்தால் ஆவனவே. கீழ்க்கடற் கழி மேற்கடல் நுகத்தில் கோப்பதும் அலைகளா லாகும் செய்கையே. ஆகவே, ஒருவர் பிறக்கும் பொழுது செல்வர் வீட்டு மகவாய்ப் பிறத்தலும் அரிய நிகழ்ச்சியேயன்றி, காரணம் இல்லாத இயற்கை நிகழ்ச்சியன்று.

மாணுக்கன் : மகவின் பிறப்பிற்குத் தந்தை தாயரது சேர்க்கையே காரணம் என்றல் கூடாதோ ?

ஆசிரியர் ; அஃது உடம்பின் தோற்றத்திற்குக் காரணமே யன்றி, அவ்வுடம்பில் புகும் உயிர் அங்ஙனம் புகுதற்குக் காரணம் அன்று ; அதற்கு வினையே காரணம்.

மேலும், இயற்கையாவது என்றும் ஒருதன்மையாய் இருப் பதே; மாறுதல் அடைவது இயற்கையாகாது. 'நீர் குளிர்ச்சி யுடையது' என்ருல், அஃது எப்பொழுதும் அவ்வாறு இருப் பதால், அத்தன்மை அதற்கு இயற்கையே. ஆனுல், சில வேளை களில், 'நீர் சுடுகின்றது' என்ருல், அஃது எப்பொழுதும் இல்லாது, சிறிது பொழுது இருந்து நீங்குவதால் அத்தன்மை அதற்குச் செயற்கை. அச் செயற்கைத்தன்மை அதற்கு நெருப் பின் சேர்க்கையால் வந்தது. அச் சேர்க்கை நீங்கியவுடன் அத் தன்மையும் அதற்கு நீங்கிவிடும். அதுபோல, பிறப்பிலே ஒருவர் செல்வராய்ப் பிறத்தலை, 'இயற்கை' எனின், அச் செல்வம் அவரைவிட்டு எப்பொழுதும் நீங்காதிருத்தல் வேண்டும். அவ்வாறின்றி, நீங்கவும் காண்கின்ரேம் ஆகையால், அஃது அவரோடு என்றும் இருக்கும் இயற்கைப் பொருளன்று ; 'நல் வினை' என்னும் காரணத்தால் வந்து பொருந்திய செயற்கையே யாம். ஆகவே, அக்காரணம் உள்ளவரையில் அச்செல்வமும் இருந்து, அது நீங்கியவுடன் அச்செல்வமும் நீங்கிவிடும். ஆகவே, உலகில் உயிர்கள் அடையும் இன்பத் துன்பங்களுக்கு அவை முன்செய்த வினையே காரணமாகும்.

மாணுக்கன் ; இன்பத் துன்பங்களுக்கு, முன்செய்த வினையே காரணம் என்பது உண்மையாயின், முயற்சியின்றியே அவை வருதல் வேண்டும். அவ்வாறின்றி முயற்சிக்குத் தக்கபடியே அவை உண்டாவது ஏன் ?

ஆசிரியர் ; ஒரு காரியத்திற்குக் காரணம் ஒன்றே என்ப தில்லை. பல காரணங்கள் உண்டு. அவை அனைத்தும் உள்ள பொழுதே காரியம் நிகழும். உதாரணமாக, மரம் செடி கொடி கட்கு வித்து ஒன்று மட்டும் காரணம் அன்று ; நிலம், நீர்,

சூரியனது வெப்பம், காற்று முதலிய பலவும் காரணங்களாம். அதனால், அவை அனைத்தும் கூடியபொழுது மரம் முதலியன உண்டாகும்; அவை கூடாதபொழுது அவை உண்டாவதில்லை.

ஒருகாரியத்திற்குப் பல காரணங்கள் இருப்பினும் அவற்றுள் ஒன்றே முதன்மை உடையதாய் இருக்கும்; மற்றவைகள் எல்லாம், அது காரியப்படுதற்குத் துணையாய் அமையும். முன் சொன்ன மரம் முதலியனவாகிய காரியங்கட்கு, 'வித்து' என்னும் காரணமே முதன்மை வாய்ந்தது. மற்றையவை எல்லாம் அது முளைத்துப் பயன் தருவதற்குத் துணையாய் அமைவனவே. அதுபோலவே, உயிர்களின் இன்பத் துன்பங்களுக்கு வினை முதற்காரணமும், முயற்சி துணைக்காரணமும் ஆதலின், முயற்சியும் உடன் வேண்டப்படுகின்றது.

முதற்காரண துணைக்காரணங்களுக்கு வேறுபாடு என்ன என்றால், ஒன்று இன்றிப் பிற காரணங்கள் எல்லாம் கூடிய வழியும் காரியம் தோன்றாதொழிதலும், அஃது உள்ள பொழுது காரியம் தோன்றுதலும் நிகழுமாயின், அவ்வொன்று எதுவோ அதுவே முதற்காரணம்; ஏனைய பலவும் துணைக்காரணங்கள். நிலத்தைப் பண்பட உழுது நீர் பாய்ச்சி எருவிட்டாலும், நிலத்தில் விதை இல்லையேல் பயிர் தோன்றாது; விதை இருப்பின் பயிர் தோன்றும். அதனால், விதை முதற்காரணம்; ஏனையவை துணைக்காரணங்கள். விதையாகிய முதற்காரணம் பயிரைத் தோற்றுவிப்பதற்குத் துணையாவனவே உழுதல் முதலிய முயற்சிகள். அதுபோலவே, இன்பத்தைப் பெறுதற் பொருட்டு எத்துணை முயற்சி செய்தாலும், இன்பத்தைத் தருகின்ற வினை இல்லாதபொழுது இன்பம் கிடைக்கமாட்டாது. அஃதிருப்பின், அம் முயற்சியால் இன்பம் கிடைக்கும். அதனால், வினை முதற்காரணம்; முயற்சி துணைக்காரணம்.

இன்னும் முதற்காரணம் உள்ளபொழுது, துணைக்காரணங்களில் சில குறையினும் காரியம் நிகழும். முதற்காரணம் இல்லாதபொழுது துணைக்காரணங்கள் எவ்வளவு நிரம்ப இருப்பினும் காரியம் நிகழாது. சில சமையங்களில் வயல்களில் உழுதல் முதலியன இன்றியும் விதை பயிரைத் தோற்றுவித்துப் பயன் தருதலைக் காண்கின்றோம். அப்பொழுது முன்பு செய்த உழவு, இட்ட எரு, பாய்ச்சிய நீர் இவற்றில் எஞ்சியிருந்த சிறுபகுதிகளே துணைக்காரணங்களாய் அமைந்துவிடுகின்றன. விதை இல்லையேல் எவ்வளவு உழுது எருவிட்டு நீர்பாய்ச்சினும் என்ன பயன்! அதுபோலவே நன்மையைத் தரும் வினை இருப்பின், சிறுமுயற்சியே பெரும் பயனைத் தந்துவிடும். ஏதோ ஒரு காரி

யத்தின் பொருட்டு நிலத்தைத் தோண்டியவர்க்கு அவ்விடத்தில் புதையல் கிடைத்தல், இக்காலத்தில் குலுக்குச் சீட்டிற்குச் சிறு தொகை கொடுத்துப் பெருந்தொகையை அடைதல், ஒருவரது செல்வம் மற்றொருவருக்கு ஏதேனும் ஒரு சிறு காரணத்தை முன்னிட்டு உரிமையாக்கப்படுதல் முதலியவை போல்வன இதற்கு எடுத்துக்காட்டுக்களாம். எனவே, வினையின் பயனைத் தோற்றுவித்தற்கு முயற்சி ஒரு முன்னிலையாய் அமைகின்றதே யன்றி, வினையும் பயன் அனைத்திற்கும் முயற்சியே நிரம்பிய காரணம் அன்று. ஆகவே, "முயற்சி திருவினை ஆக்கும்" என்றது வினை பயன் தரும் முறையைக் கூறியதேயன்றி, 'வினை உண்டு' என்னும் கொள்கையை மறுத்ததன்றாம்.

திருவள்ளுவர், "முயற்சி திருவினை ஆக்கும்; முயற்றின்மை இன்மை புகுத்திவிடும்" என்றுமட்டும் சொல்லிவிடாமல்,

> "தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்
> மெய்வருத்தக் கூலி தரும்"

என்றும்,

> "ஊழையும் உப்பக்கம் காண்பர், உலைவின்றித்
> தாழாது உஞற்று பவர்"

என்றும் வினையை மறுத்தும் கூறியுள்ளாரே எனின், அவை வினையை மறுத்துக் கூறியனவாதல் எப்படி? "தெய்வத்தான் ஆகாதெனினும்" என்னும் குறளில், 'பயன் தரும் வினை உள்ள பொழுது கருதிய பயன் கருதியவாறே கிடைக்கும்; அஃது இல்லையாயின், முயற்சிக்கு ஒருபயன் கிடைக்கும்; அதனால், எப்பொழுது முயற்சியை மேற்கொள்ளுதல் நலம்' என்றுதான் கூறியுள்ளார். 'வினை உண்டு' என்பதை மறுக்கவில்லை.

"ஊழையும் உப்பக்கம்" என்னும் குறளில், 'வினை என்பதும் முன் பல பிறப்புக்களில் செய்த முயற்சியின் மாற்று வடிவந்தானே? அதனால், அதனை இவ்வொரு பிறப்பில் அளவிடற்கரிய பெருமுயற்சிகொண்டு எதிர்த்தால் புறங்காணுதல் கூடும்' என்றுதான் கூறியுள்ளார். அது, 'வினை உண்டு' என்னும் கொள்கைக்கு மாறுதல் எப்படி? இங்ஙனம் இப்பிறப்பில் செய்யும் பெருமுயற்சியால் முன்பிறப்பிற் செய்த வினையை வெல்லுதல் எங்கோ ஒன்றிரண்டு இடங்களில் அரிதில் கூடுவதன்றி, எங்கும் எளிதில் பெரும்பான்மையாய் நிகழ்வதன்று.

பெரும்பான்மையாக நிகழ்வது, வினையின்முன் முயற்சி தோல்வி அடைவதுதான். அதுபற்றியே அவர்,

> " ஊழிற் பெருவலி யாவுள ? மற்றொன்று
> சூழினும் தான்முந் துறும் "

என்பதையே வலியுறுத்திக் கூறினார். முயற்சியால் வினையை வென்றதற்கு, அன்றுமுதல் இன்றுவரையில் மார்க்கண்டேயரது வரலாது ஒன்றே எடுத்துக்காட்டாகக் காட்டப்படுகின்றது. வேறு சிலவும் இருக்கலாம். எனினும், அதனை இயற்கை என்றல் அமையாது. மார்க்கண்டேயர் வினையினின்றும் தப்பியதும், யமனது பாசம் கழுத்தில் சுருக்கிட்டு இழுக்கும் அளவிற்கு வினையினது பயன் பெரும்பான்மையும் முற்ற நிகழ்ந்த எல்லையில் தான் எனப்படுகின்றது. அதனால், அஃது உலகத்தில் எங்கும் எப்பொழுதும் நிகழ்கின்ற ஓர் பொது நிகழ்ச்சியாகாது. இன்னும், "தெய்வத்தான் ஆகாதெனினும்", "ஊழையும் உப்பக்கம் காண்பர்" என்னும் குறள்களிலேயே, 'தெய்வம், ஊழ்' என்பவற்றால் வினையுண்மை கூறியிருத்தலால், அக் குறள்கள், 'வினையில்லை' என்னும் கருத்துடையனவாகாமை தெளிவு.

திருவள்ளுவர், 'இன்பத் துன்பங்களுக்கு வினையே முதற் காரணம்' என்று கூறியதுமட்டுமன்று; 'அவற்றிற்குத் துணைக் காரணங்களாகிய முயற்சி, அறிவு என்பவற்றையும் வினையே தரும்' என்பதை,

> " ஆகூழால் தோன்றும் அசைவின்மை ; கைப்பொருள்
> போகூழால் தோன்றும் மடி "

> " பேதைப் படுக்கும் இழவூழ் ; அறிவகற்றும்
> ஆகலூழ் உற்றக் கடை "

> " நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
> உண்மை யறிவே மிகும் "

என்னும் குறள்களால் இனிது விளங்கக் கூறியுள்ளார்.

ஒருவன், இயற்கையில் சுறுசுறுப்புடையவனாகவே இருப்பினும், குறிப்பிட்ட ஒரு சமையத்தில் சுறுசுறுப்பின்றிச் சோம்பல் கொண்டு இருந்து, அச்சோம்பலின் விளைவாகப் பெரியதோர்

இழப்பினை அடைதல் உண்டு; ஆகவே, அப்பொழுது அவனைச் சோம்பல் கொள்ளச் செய்தது, அவனது தீவினையே. இயற்கையில் நுண்ணறிவும், பெருங்கல்வியும், உலக அனுபவமும் உடையவனாகிய ஒருவன், குறிப்பிட்ட ஒரு செயலில் அறிவு மயங்கித் தவறான வழியில் சென்று கேடுறுவதற்கும் அவன் தீவினைதான் காரணம். இங்குக் குறிப்பிட்ட இவர்கட்கு எதிராக இயற்கையில், சோம்பலுடையவனும், மந்தபுத்தி யுடையவனும், கல்வியும் அனுபவமும் இல்லாதவனும் பெருநலம் பெறுதற்கும் அவனது நல்வினையே காரணமாகும். எனவே, உலகில் ஒவ்வொருவருக்கும் அவ்வப்பொழுது வரும் நன்மை தீமைகட்கெல்லாம் அவரவரது முன்னை வினையே காரணமன்றி, அப்பொழுது அவர்கள் முயற்சி செய்வதும், செய்யாமையும் அல்ல என்பது தெளிவாதலின். 'வினை அல்லது கன்மமலம்' என்பது உண்டென்பது நன்கு விளங்கும்.

இன்னும் சோதிடம் முதலியவற்றால் ஒருவரது வாழ்நாளில் இன்ன இன்ன பொழுதில் இன்ன இன்ன நன்மை தீமைகள் நிகழும் என்று முன்னரே அறிந்து சொல்லப்படுவதும், அவை அங்ஙனமே நிகழ்தலும் அனுபவமாய்க் காணப்படுவன. அவற்றுள் சிறப்பு வகையாகக் கூறப்படும் சில சிறுபான்மைச் செயல்கள் தவறினும், பொதுவாகக் கூறப்படும் பெரும்பான்மைச் செயல்கள் தவறுவதில்லை. சிறுபான்மைச் செயல்கள் தவறுவதற்கும், அறிந்து சொல்லும் முறையில் உண்டாகும் தவறு காரணமேயன்றி வேறன்று. ஆகவே, ஒவ்வொருவரது வாழ்க்கையிலும் இன்பத் துன்ப அனுபவங்களாகிய நிகழ்ச்சிகள் யாவும், ஓர் அவைக்கள நிகழ்ச்சி பலவும், முன்னரே அமைக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலின்படி நிகழ்வதுபோல, முன்னர்க் கருவிலேதானே அமைக்கப்பட்ட முறைப்படி நிகழும் நிகழ்ச்சிகளேயாதல் தெளிவு.

" பேறிழ வின்ப மோடு
பிணிமூப்புச் சாக்கா டென்னும்
ஆறும்முன் கருவுட் பட்டது:
அவ்விதி அனுப வத்தால்
ஏறிடும் "

என்கின்றது சிவஞான சித்தி. இவ்வாற்றால், 'வினை' என்னும் கன்ம மலம் உண்டு என்பதனை ஐயமறத் தெளிவாயாக.

(தொடரும்)

திருநள்ளாற்றில்
சனிப்பெயர்ச்சியும் கோடி அர்ச்சனையும்

திரு. என். ராமகிருஷ்ணு, மாயூரம்.

திருநள்ளாற்றில் மார்ச்மாதம் 10-ம் தேதி சனிப்பெயர்ச்சி விழா கொண்டாடப்படுகிறது. அவ்வமயம் சனிபகவான் கும்பராசியிலிருந்து மீனராசிக்குச் செல்கின்ருர். லக்ஷக்கணக்கான மக்கள் திருநள்ளாறு செல்வார்கள். பிரயாணிகளின் சௌகரியத்தை முன்னிட்டு தேவஸ்தான பரிபாலன கமிட்டியார் சகலவிதமான ஏற்பாடுகளையும் செய்துள்ளார்கள். சுமார் $1\frac{1}{2}$ லக்ஷம் ரூபாய் செலவில் **பிரயாணிகள் விடுதி** ஒன்று கட்டப்பட்டுள்ளது. கோவில் திருப்பணிக்காக நிதி சேர்ப்பதை ஒட்டி சனிப்பெயர்ச்சியின்போது ஒரு சிறு தொகையை நுழைவுக் கட்டணமாக வசூலிப்பார்கள். திருநள்ளாறு தேவஸ்தானம் காரைக்கால் அட்மினிஸ்ட்டிரேட்டரை தலைவராகக் கொண்ட கமிட்டியால் நிர்வகிக்கப்பட்டுவருகின்றது. தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் ஓர் அங்கத்தினர். ஆதீனச் சார்பில் அங்கு ஒரு தம்பிரான் சுவாமிகள் எப்பொழுதும் நித்திய விதிகளை மேல்பார்த்து வருகின்ருர்கள்.

சில மாதங்களுக்கு முன் சனிபகவானுக்குக் "**கோடி அர்ச்சனை**" தொடங்கப்பட்டது. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் **அவர்கள்** கோடியருச்சனையில் முதல் லக்ஷத்தை செய்வித்தார்கள். சனிப் பெயர்ச்சியின்போது ஐம்பது லக்ஷம் பூர்த்தியாகும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. நாட்டின் நன்மைக்காகவும், மக்களின் க்ஷேமத்திற்காகவும் நடைபெறும் இந்தக் கோடி அர்ச்சனையில் கலந்துகொள்ள விரும்புகின்றவர்கள் தேவஸ்தானத்திற்குத் தங்கள் பெயர், ராசி, நக்ஷத்திரம் இவற்றுடன் பணம் அனுப்பினுல் பிரசாதம் தபாலிலும் அனுப்பப்படும்.

ஒரு சகஸ்ரநாமம்	ரூ. 5--00	அரை லக்ஷம்	ரூ. 225—00
லக்ஷ அர்ச்சனை	ரூ. 450—00	கால் லக்ஷம்	ரூ. 120—00

சோழநாட்டில் மிகவும் பழமையான தலம் திருநள்ளாறு. பேரளம் புகைவண்டி நிலையத்திலிருந்து, காரைக்கால் செல்லும் வழியில் உள்ளது. மற்றும் மாயூரம், பொறையார், கும்ப கோணம், நாகைப்பட்டினம் முதலியஊர்களிலிருந்து பஸ்மூலம் செல்லலாம். திருநள்ளாறு " **சப்தவிடங்க** " தலங்களுள் ஒன்று. முசுகுந்தசக்ரவர்த்தி இந்திரனிடம் இருந்து பெற்ற ஏழு லிங்கங்களில் ஒன்றை இங்கு பிரதிஷ்டை செய்தான். திருநள்ளாற்றில் உள்ள விடங்கர் பெயர் **நகவிடங்கர்.** நடனம் **உன்மத்த நடனம்.** ஆதியில் இவ்வூருக்குப்பெயர் தர்பாரண்யம். தலவிருக்ஷம் தருப்பை. ஆதலால் இப்பெயர் வழங்கலாயிற்று. நகவிடங்கர் பிரதிஷ்டை செய்யப்பட்டதால் நகவிடங்கபுரம் என்ற பெயரும் பெற்றது. நளனுக்கு நன்னெறிகாட்டிய தலமாதலால் **நள்ளாறு** என்று பெயர். நாளடைவில் திருநள்ளாறு என்று வழங்கலாயிற்று. ஆலயம் கிழக்கு நோக்கியது. அம்மையார் தெற்கு நோக்கியுள்ளது. கர்ப்பகிரகத்தின் தென்புறம் உள்ளது விடங்கதியாகராஜ மண்டபம். இறைவன் திருநாமம் **தர்பாரண்யேசுவரர்.** அம்மையார் **போகமார்த்தபூண்முலையாள்.** நகவிடங்க தியாகராஜரின் அம்பாள் திருநாமம் **நீலோத்பலாம்பாள்.** சனிபகவான் சிறப்பு மூர்த்தி. நவக்கிரகங்களில் மற்றைய கிரகங்கள் கிடையாது.

பல தீர்த்தங்கள் இருந்தபோதிலும் **நள தீர்த்தம்** மிகவும் சிறப்பானது. இதில் மூழ்கினால் எல்லாவிதமான பீடைகளும் கிரக தோஷங்களும் நிவர்த்தியாகும். பக்கத்தில் **நள கூபம்** உள்ளது. நளனுக்காக இறைவன் காசி கங்கையை இங்கு வரவழைத்தார். இதில் மக்கள் குளிப்பதில்லை. நீரை தலை மீது தெளித்துக்கொள்கின்றனர்.

பிரதிதினமும் திருநள்ளாற்றில் சனிபகவானுக்கு இப்பொழுது அர்ச்சனை நடந்து வருகின்றது. மக்கள் குடும்பத்துடன் வந்து தரிசிக்கின்றனர். சனிபகவான் தங்கக் கவசத்துடன் காட்சி அளிக்கின்றார். தருமை ஆதீனம் தம்பிரான் சுவாமிகள், கோவில் நிர்வாகஸ்த்தர்கள் எல்லோரையும் இன்முகத்துடன் வரவேற்கின்றனர். அர்ச்சகர்கள் அர்ச்சனையை அழகாக வாசித்துச் செய்கின்றார்கள். நாட்டின் பலபாகங்களிலிருந்தும் கோடி அர்ச்சனைக்குக் காணிக்கைகள் வந்து கொண்டிருக்கின்றன. சனிபகவான் வர்ண ஓவியப் படத்தை அழகாக அச்சிட்டுள்ளார்கள்.

வேளூர் தேவஸ்தானம் (வைத்தீசுவரன்கோயில்)

இலவச சித்த வைத்தியசாலை,

டாக்டர். திரு. K. இராமகிருஷ்ணன்

(மலர் 26, இதழ் 3, பக்கம் 165 இன் தொடர்ச்சி)

நீரிழிவு

முதலாம்நூற்றுண்டிலே நீரிழிவு என்றதோர் நோய் உண்டு என்று பொதுவாக அறிந்திருந்தனர். அது ஊனையும் உருக்கி நீரையும் போக்கக்கூடியது என்றும் அறிந்திருந்தனர். இரண்டாம் நூற்றுண்டில் சீன டாக்டரான Tcoang-Tchong-King என்பவர் இது நீர் வேட்கையை உண்டாக்கும் ஒரு பிணி என்று குறித்துள்ளார். 1698 ஆம் ஆண்டு மார்டியங் (Martian) என்பவர் நீரிழிவு பாரம்பரியமாக வரக்கூடிய நோய் (hereditary) எனக் கூறினர். தொடர்ந்த ஆராய்ச்சியில் 1775 ஆம் ஆண்டு Dr. Dobson என்பவர் இந்நோயின் காரணமாக இரத்தத்திலுள்ள சர்க்கரைச்சத்து சிறுநீருடன் வெளியாகிறது எனக்கண்டார். Dr. Cawley என்பவர் 1778 ஆம் ஆண்டில் கணையச் சுரப்பிக்கு ஏற்படும் ஊறுதான் இன்சுலின் சுரக்காது பயனுகாத சர்க்கரை சிறுநீருடன் வெளியாகக் காரணம் என்று நிரூபித்தார். இத்தகைய ஆராய்ச்சிகளின் முடிவாக 1815 ஆம் ஆண்டு Dr. Cullen என்பார் இன்சுவை நீரிழிவு (Diabetes mellitus) சுவையற்ற நீரிழிவு (Dibetes insipidus) என்று இனம் பிரித்தார். பெருமயக்கம் (Coma) என்ற நிலை நீரிழிவின் காரணமாக ஏற்படும் என்று Dr. Prout கண்டறிந்துணர்த்தினர். ட்ருமர் (Trommer) ஃபெல்லிங் (Pehling) என்பார் சிறு நீரில் சர்க்கரை இருப்பதைக்காண சோதனை கண்டார்கள். 1885ல் கிளாட்பெர்னுட் (Claude Bernard) கல்லீரலில் கிளைகோஜன் சேமிப்பும், சிதைப்புப்பணி, இரத்தச் சர்க்கரை மிகுதி (Hyporglycaemia) இவற்றையெல்லாம் முன்னதாக ஆராய்ந்து மருத்துவ உலகிற்கு அருந்தொண்டாற்றினர். லாங்கர் ஹன்ஸ் (Islets of Langerhens on the back side of the pancress.) கோளாறு இன்சுலின் சுரப்பை பாதிக்கும் என்று ஆய்ந்து, கண்ட உண்மையை வெளிப்படுத்தி விழுப்புகழ் எய்தினர். 1889ல் Van Meraing Muikovski என்பவர் நாதன் கணையத்தில் இன்சுலின் சுரப்பியை அகற்றி, இன்சுலின் பற்றுக்குறையே நீரிழிவிற்குக் காரணமாகும் என்று ஐயத்திற்கு இடமில்லாது நிலை நாட்டினர். இவ்வளவு, ஆராய்ச்சி முற்றியும் நீரிழிவின் தொல்லை தீரவில்லை. அதனுல் ஏற்படும் அச்சத்திற்கும் எல்லை இல்லை.

நாகரிகத்திலும் அறிவியல் துறைகளிலும் சிறந்து விளங்கிய தமிழ்நாடு, நீரிழிவு, பற்றிய திட்டமான ஆராய்ச்சி அறிவை இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னரே பெற்றிருந்தது நமக்குப் பெருமை தருவதாகும். சில ஆண்டுகட்கு முன் திருவண்ணாமலை ரமண ரிஷிகள் ஆசிரமத்திற்கு வருகைதந்த அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் அங்குள்ள கல், மண் இவற்றின் ஆராய்ச்சி முடிவுகளைக்கண்டு தமிழகத்தின் நாகரிகத்தொன்மை அறிவியல் துறையில் முற்போக்கான சாதனைகளையும் சிறப்பாக மருத்துவத் துறையில் ஈடு இணை இல்லாப் பெருமையையும் வியந்து போற்றி உள்ளார்கள். அகத்தியர் தம் பழைய நூல்கள் ஸுஸ்ருத சம்ஹிதை முதலியவற்றினின்று வியத்தகு முறையில் அறுவை சிகிச்சைக்கான (Operation Surgical Instruments) உபகரணங்கள் விவரிக்கப்படுதலைக் காண்கிறோம். குலசேகர ஆழ்வார் தம் பாசுரத்தில்

" வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன்பால்
மாளாத காதல் நோயாளன் போல "

என்றுவரும் திருமொழி, அடிகள் அக்காலத்தில் சஸ்திர சிகிச்சையில் மருத்துவ வல்லுநர்களாக ஈடுபட்டிருந்தது நன்கு புலனாகிறது. சித்த வைத்தியத்தின் தந்தையாம் அகத்தியர் தம்நூல்கள் வற்றா ஊன்றுக்களன்றோ? தமிழகத்தில் சித்தர்கள் தவமியற்றி மக்கள் நல்வாழ்வு பெறச்செய்த மாண்புகள் பன்னப்பெறுபவோ? சித்தர்காடு, சித்தன் காத்திருப்பு, சித்தன் வாழ்வு, முதலாய இடங்களின் பெயர்களே சித்தர்கள் தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் வாழ்ந்து தங்கள் அருளினால் மக்கள் வாழ்விற்குத் துணை செய்தனர் என்று அறிவிக்கின்றன. அவர்கள் தம் அருட்டிறத்தால் மூலிகைகள், மருந்துகள் முதலியவற்றைக் கொண்டு நோய் தணிக்கச் செய்த நன்மைகள் மிகப்பல. வள்ளுவர் பெருமான் மருந்து என்று ஒன்று வேண்டாம். உண்ணத்தருவனவற்றைக் காலமறிந்து, அளவறிந்து அற்றது போற்றி உண்டால் என்று கூறுவர். காலத்தால் முற்பட வாழ்ந்த இப்பெரியார்கள் வைத்திய முறைகளைப் பற்றிக் கூறி இருப்பனவற்றைத் தொகுத்துக் கூறிடின் காலமும் இடமும் வாய்ப்பில்லை என்ற கருத்தால் ஓரிரண்டு இடங்களைச் சுட்டிக்காட்டுதல் ஒன்றே அவர்தம் பெருமையைத் தெரிக்கச் சாலும் எனக் கருதுகிறேன்.

திருமூலர் பெரிய சித்தர், யோகி, தவம்செய்த தவமாம் பெரியார். அவர் திருவாய் மலர்ந்தருளிய திருமந்திரம், அனுபவமும், அருளும் உடையது. உடலை ஓம்புதல் இன்றியமை

யாமையை மிக அழகாக வற்புறுத்துகிறார். இறைவன் உறையும் கோயில் இவ்வுடல்கள்,

“ உடம்பினை முன்னம் இழுக்கென்று இருந்தேன்
உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான் என்று
உடம்பினை யான் இருந்து ஓம்புகின்றேனே.”

பாலை நோக்கமாகக்கொண்டு பாலை ஏற்ற கலத்தைப் பராமரிப்பது போல சிவபெருமான் உயிர்க்குயிராய் நம்மனத்தகத்தே கோயில் கொண்டருளினன் என்னும் உண்மை உணர்ந்து, இவ்வுடல் அவன் உடைமை என்று உணர்ந்து அதனை நன்கு பேணுகின்றேன். இந்த உண்மையை உணராத காலத்திற்கு முன்பு உடலை இழுக்குடைய தென்று கருதியிருந்தேன், என்று அவர்கூறுவதிலிருந்து உடலினை நன்கு கவனித்து வனப்புடனும், வலிவுடனும் வைத்துக்கொள்ளவேண்டியதன் சிறப்பு நன்கு தெரிகிறது. உடலெடுத்ததன் பயனை நுகராததற்கு முன்பே உடலைக் கெடுத்துக்கொள்ளுதல் பாலை உண்ணு முன்பே பாற்கலத்தை அழிய விடுவதற்கு ஒக்கும். பாலுக்குப் பாலும்போய், பாத்திரத்திற்குப் பாத்திரமும் போவது தான் மிஞ்சும். ‘‘கருப்பூர வாசனை யறியாமா’’ ஒன்றுண்டே, அதே கதைதான். இதையெல்லாம் நன்கு எண்ணி உள்ளக் கோயிலை அரண்செய்யும் யாக்கையைப் பேணுதல் காயசித்தி யாகுமன்றோ? இதனை நன்கு தெளிவுறுத்தத்திருமூல நாயனார்.

‘‘ உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே ’’

என்று மிக அழகாக இயம்புகிறார். இவைகளினின்று நம் பெரியோர்கள் நோய்க்கிடமில்லாத யாக்கையைப் பேணுவது எத்துணை சிறந்தது என்று எண்ணி வாழ்வாங்கு வாழ வழி வகுத்தார்கள் என்பது தெரிகின்றதன்றோ? பதினெண்கீழ்க் கணக்கு நூல்களில் மருத்துவ மூலிகைகளை அடிப்படையாகக் கொண்ட சிறுபஞ்சமூலம், திரிகடுகம், ஏலாதி என்ற நூல்கள் இருப்பனவற்றை நாம் அறிவோம். மருந்துகள் உடலுக்கு நல்லது செய்வனபோல, செய்யுள்களின் கருத்துக்கள் உள்ளத்திற்கு நல்லது செய்யும் என்னும் கருத்தால் நன்றாய் ஞானங் கடந்த தொல்கேள்விப் பெரியார்கள் இத்தகைய பெயர்களை தம்

நூல்களுக்குச் சூட்டினார்கள். இங்கே கூறியவற்றால் தமிழகத்தின் புலமை சான்ற பெரியோர்கள் நோய்நாடியும் நோய் முதல் நாடியும், அது தணிய வாய் நாடியும் இயன்றதெல்லாம் ஒல்லும் வகையால் இயற்றியுள்ளார்கள் என்பதைத் தெரிவித்தற்கே. மருத்துவன் தாமோதரனார் என்ற ஒரு புலவர் வாழ்ந்த உண்மை அவர் இலக்கிய இலக்கணமட்டிலல்லாது மருத்துவத்திலும் துறைபோயவர் என்பதைத் தெரிவிக்கின்றதன்றோ?

Of the eighteen sittars mentioned in these Tantrika works one had the name 'Bogar' in Tamil. A considerable number of medical and alchemical works are attributed to him. According to these sources, he was originally a chinese who came to India in the third centrury A. D. To begin he spent some time in Patna and Gays (Page 354. Lohayata - study in Ancient Materialism. By Debiprasad chattopadyaya July 1959 Edition.)

(தொடரும்)

குமரகுருபரன் — ஆண்டுச் சந்தா 3 — 00 —

தருமையாதீனத்து முனிபுங்கவரும், ஸ்ரீ காசி மடத்து முதல்வருமான ஸ்ரீலஸ்ரீ குமரகுருபர சுவாமிகளினுடைய திருப்பெயர் பூண்டு, சமயம், இலக்கியம், அறம் முதலியவற்றை எளிய நடையில் தெளியச்செய்யும் ஆராய்ச்சி விளக்கத்துடன் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களது ஆணையின்வண்ணம் உயரிய இவ்விதழ் வெளிவருகிறது.

விலாசம் : நிர்வாக ஆசிரியர், உயர்திருவாளர்.

T. M. குமரகுருபரன் பிள்ளை B. A.. B. L., அவர்கள்,

"குமரகுருபரன்" ஆபீஸ், ஸ்ரீவைகுண்டம்.

‘அமுதிற்குத் தமிழென்று பேர்’

வித்துவான். திருமதி. ப. நீலா

(மலர் 26, இதழ் 3, பக்கம் 145 இன் தொடர்ச்சி)

கலித்தொகைக்கு அமைந்த அடைமொழியே அதன் சிறப்பைத் தெள்ளென விளக்கும். ‘கற்றறிந்தோர் ஏத்தும் கலி’- யாக இது விளங்குகிறது. பாலை, குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல் என்ற ஐந்திணை பற்றியும் எழுந்த கலிப் பாக்களின் தொகுதியே கலித்தொகையாகும்.

திணை	பாடியவர் பெயர்	பாடல்கள்
பாலை	பெருங்கடுங்கோ	36
குறிஞ்சி	கபிலர்	29
மருதம்	மருதனிளநாகர்	35
முல்லை	நல்லுருத்திரன்	14
நெய்தல்	நல்லந்துவன்	33

பெருங்கடுங்கோன் பாலை கபிலன் குறிஞ்சி
மருதனிள நாகன் மருதம் — அருஞ்சோழ
னல்லுத் திரன்முல்லை நல்லந்துவனெய்தல்
கல்விவலார் கண்ட கலி. என்பது பாடல்.

பிரிதல் பாலையின் உரிப்பொருளாம். புணர்தல் குறிஞ்சி. ஊடல் அணிமருதம் பெறும். இல்லிருத்தல் முல்லையாகும். இரங்கியபோக்கு ஏர்நெய்தல் என்று பேசுவார்கள்.

கலித்தொகை கற்றறிந்தோரால் ஏற்றப்படக் காரணம் என்ன? என்பதை இனிக்காணலாம். பாலையாம் பிரிவையுங் கூடச் சுவைபடப் பேசுவார் பெருங்கடுங்கோ.

நடுவுநிலைமை நீங்கிய அமைச்சன் சொல்கேட்டு கொடுங் கோல் செலுத்தும் மன்னவனைப் போல பகலவனின் கிரணங்கள் உலகத்தைச் சுடுகின்றன என்பர். (8) மரல்சாய, மலைவெம்ப மந்திகள் வருந்த உரல்போலடிகொண்ட யானைகள் உண்கயம்

காணாமல் சேறுசுவைத்துத் தம் செல்லுயிர் தாங்கும் கடுமை யான பாலை யென்பது (13) பிறிதோரிடம். ஆறலைகள்வரின் பயம் அங்கே அதிகமுண்டு. கையில் பொருள் இல்லையாயினும் அவர்கள் துடித்துவிழும் அரியகாட்சியைக் காண்பான்வேண்டி அம்புவழங்கும் ஆறலைகள்வர் என்று பாலையின் கொடுமையும் பேசப்படும்.

.... கடுங்கண் மறவர் தாம்
கொள்ளும் பொருளில ராயினும் வம்பலர்
துள்ளுநர் காண்மார் தொடர்ந்துயிர் வௌவலிற்
புள்ளும் வழங்காப் புலம்புகொள் ஆரிடை

அம்பு நெஞ்சில் செருகிய நிலையில் உண்ணீர்வறப்பப் புலர் வாடும் நாவிற்குத் தண்ணீர் பெறாத் தடுமாற்றறுந் துயரத்தைக் கண்ணீரே போக்கும் அவலக் காட்சிகளுக்கும் அங்கே பஞ்ச மில்லை. (6)

இத்தகைய பாலையில்தான் தலைவனும் பிரிந்து சென் றுள்ளான். அந்தத்துயர் ஒருபுறம் வருத்த ... இளவேனிலின் வருகையாலும் வாடுகிறாள் தலைவி. இளவேனிலும் வந்தது எப்படி?

முன்னொன்று தமக்காற்றி முயன்றவர் இறுதிக்கண்
பின்னொன்று பெயர்த்தாற்றும் பீடுடை யாளர்போல்
பன்மலர் சினையுகச் சுரும்பிமிர்ந்து வண்டார்ப்ப
இன்னமர் இளவேனில் வந்தது. (34)

(ஆற்றில் தண்ணீர் ஓடிக்கொண்டிருந்தபோது அந்நீரைத் தம் வளர்ச்சிக்குப் பயன்படுத்திக்கொண்ட கரையோர மரங்கள் எல்லாம் ஆற்றில் நீர்வற்றி வறண்டபோது தத்தம் மலர்களை அங்கங்கே உதிர்த்து அவ்வாற்றை அழகுசெய்கின்றன. என்னே செய்நன்றியறிதலின் திறம்! - என்றுநாம் வியக்கும் வண்ணம் இனிய இளவேனில் வந்தது.)

இளவேனிலுடன் இணைந்து வந்த இவ்வசைவாடையும் தோளதிர்பகஞ்சேரத் துவற்றும் சின்மழையும், முகைவெண்பல் நுதிபொர முற்றிய கடும்பனியுமாகச் சேர்ந்து பகைவென்று திறைகொண்டு பாய்திண்தேர்மேல் பவனிவரும் தலைவரின்

வகைகொண்ட செம்மல் வனப்பார வொட்டாமல் நம்மைத் தடைசெய்கின்றனவே என்று தோழியுடன் புலம்புவாள்.(31)

வன்கண்மையும், வெப்பமும் நிறைந்த அவ்வழியிலும் சில அன்புசெறி காட்சிகள் உண்டு என்பதனைப் பெருங்கடுங்கோ நினைவுபடுத்துவார்.

துடியடிக் கயந்தலைக் கலங்கிய சின்னீரைப்
பிடியூட்டிப் பின்னுண்ணும் களிறு'

'அன்புகொள் மடப்பெடை அசைஇய வருத்தத்தை
மென்சிறகரால் ஆற்றும் புறவு

'இன்னிழ லின்மையால் வருந்திய மடப்பிணைக்குத்
தன்னிழலைக் கொடுத்தளிக்கும் கலை'

இத்தகைய நலம்நிறைந்த கானத்தில்சென்றவர் நம்மை வருத்தத்தில் ஆழ்த்துவாரல்லர்; இதோ பல்லியும் பாங்கொத்திசைத்தது இன்னே வருவார் என்று ஆறுதல் கொள்ளும் அன்பின் பக்கமும் (11) உண்டு.

இன்றொருத்தி நிலையில்லாத பொருளைத் தேடிஅலையும் வாழ்வைக் காட்டிலும் ஒன்றன்கூறுடை உடுத்திவாழும் வாழ்வாளுலும் ஒன்றினார் வாழ்வே வாழ்வாகும் என்று பறையறைவாள். (18)

நிலத்திலுள்ளார் நாவிலெல்லாம் நடனமிடுகின்ற மதுரை மக்கள் சான்றோர் நாவில் பிறந்த கவிதைகளின் புதுமையைக் கொண்டாடும் இளவேனில்காலம்,

'நிலனாவில் திரிதரும் நீண்மாடக் கூடலார்
புலனாவிற் பிறந்தசொற் புதிதுண்ணும் பொழுது' (35)

இளவேனில் காலத்தின் மகிழ்வுக்குக் காரணம் அறிந்து ஒருபால் மகிழ்கின்றோம்.

கோதிலா காதல்பயில் குறிஞ்சித் திணையிலும் எண்ணற்ற இன்பக்காட்சிகள் உண்டு. தலைவியின் எழில்வடிவம் தன்னை 'அலையிடைப்பட்ட துரும்பென' ஆட்டுவிக்கிறது என்பதனை எத்துணை நாகரீகமாக ஒருதலைவன் கூறுகிறான் கேளுங்கள்

நீயுந் தவறிலை நின்னைப் புறங்கடைப்
போதர விட்ட நுமரும் தவறிலர்
நிறையழி கொல்யானை நீர்க்கு விட்டாங்குப்
பறையறைந் தல்லது செல்லற்க வென்னா
இறையே தவறுடையான் (20)

மற்றொரு இடத்தில் ஒப்பரிய தெய்வத்திருக்குறளை அகப் படுத்திப் பெண்ணொருத்தி பேசுகிறாள். தலைவன் நின்னையான் தழுவுதல் எனக்கு இன்பம் தருகிறது; ஆகையால் தழுவினேன் என்றான். அதற்கவள்

'தமக்கினி தென்று வலிதிற் பிறர்க்கின்னா
செய்வது நன்றாமோ மற்று'

என்று தெளிவுபடப் பேசும் திறம் நம்மைப் புல்லரிக்கச் செய்கிறது. (26) இன்னா செய்யாமை - என்பது எங்கே எப்படி விளக்கம் பெறுகிறது பார்த்தீர்களா !

'பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை
தன்நோய்க்குத் தானே மருந்து'

என்ற தெய்வக்குறளின் நிழலாக,

'நின்முகம் காணும் மருந்தினேன்
நின்முகந் தான் பெறி னல்லது கொன்னே
மருந்து பிறிது யாதும் இல்லேன்' (24)

எனவரும் இடங்களைக் காணலாம்.

மருதத்தில் நகைச்சுவை :- கூனியொருத்தியும் குறளன் ஒருவனும் சந்திக்கின்றனர். கூனியைப்பார்த்த குறளன்மனதில் அற்புதமான உவமையொன்று தோன்றுகின்றது.

நீர்க்கரையிலே வளர்ந்த ஒன்றின் நிழல் நீரில் சுருங்கி நெளிந்து தோன்றுவதுபோன்ற உடம்புகொண்ட கூனியே உன்னோடு சிறிது பேசவேண்டும். இதற்கு நீ என்னதவம் செய்தாயோ! என்று அவளுடன் பேச்சைத் துவக்கினான். கூனிக்கு அவனது வருணனை கோபத்தைக் கிளறிவிட்டது. ஆண்டலைக்கின்ற பறழ் மகனே... உன்னைவிடவா இழிந்தது

கூனின்பிறப்பு! ஆகா... நீ நடக்கும் நடையின் அழகுதான் என்னே! ஆமையை யெடுத்து நிறுத்தியதுபோல தோள்களிரண்டும் வீசி மன்மதன் போன்றே நடக்கின்றாயே! என்று சளைக்காமல் அவளும் வார்த்தையாடினாள்! நீ .... எதைச் சொன்னாலும் நான் உன்மேல்கொண்ட ஆசைமட்டும் மாறாது... இனி நீ நல்கின் என் உயிர் உண்டு... என்று கூனியின் அன்பைக் குறளன்பெறுவதாகப் பாடல்செல்லும்.(27)

மருதத்தின் உரிப் பொருளாய் ஊடல் ஒருபாடலில் சிறந்து விளங்குகிறது. தன்மகன் கையில் பரத்தையால் செரிக்கப்பட்ட மோதிரம் ஒன்றினைக் காண்கிறாள் தலைவி. 'நின்னை இது தொடுகென்றவர் யார்' என்று அடங்காச் சினத்துடன் வினவி நிற்கும் தாயை அச்சத்துடன் பார்க்கிறது குழவி. அறியாக் குழந்தைநிலை அவளுள்ளத்தில் அருளைச் சுரக்கச் செய்கிறது. தன்வினையே இதற்குக் காரணம்... பாவம்... இக்குழந்தை எப்படி அதற்குப் பொறுப்பாகும் என்றுதன்னைத் தானே தேற்றிக்கொள்வாள்.

அஞ்சாதி! நீயுந் தவறிலை நின்கை இதுதந்த
பூவெழி லுண்கண் அவளும் தவறிலள்
வேனிற் புனலன்ன நுந்தையை நோவார்யார்
மேனின்றும் எள்ளி இது இவன் கைத்தந்தாள்
தான்யாரோ என்று வினவிய நோய்ப்பாலேன்
யானே தவறுடையேன், (19)

என்ற பாடலில் வேனிற் புனலன்ன நுந்தையை நோவார்யார்? என்ற தலைவியின் வாக்கில் எத்துணை நாகரிகமும் மனக் குமுறலும் அடங்கியுள்ளன! வேனிற்காலப் புதுப்புனல் போல எல்லாருக்கும் பயன்படுகிறான் என்பதை வெகுநுட்பமாக கூறும் பெண்மதியை உண்மையில் பாராட்டத்தானேவேண்டும்.

தன் தொடியை நெகிழச் செய்த தலைவன்பால் மாறாக் காதல்கொண்ட தலைவியொருத்தியின் இதயப்பாங்கை நல்லந்துவனார் படம்பிடித்துக் காட்டுகிறார்.

தலைவன் பிரிந்துசென்றுள்ளான். கருணையற்ற மனித மனம்போல பாலைவழியும் வறண்டுதான் கிடக்கும். நீரற்ற நெடிய மேகங்களால் தலைவனுக்கு என்னபயன்? தாகத்தையும்

வெப்பத்தையும் அவை தணிக்க ஒல்லுமோ! தலைவியின் இதயத்தில் அன்புபெருக்கெடுக்க கண்களிலிருந்து கண்ணீரும் பெருக்கெடுத்தோடுகிறது. அப்பொழுது ஓர் எண்ணம் உதயமாகிறது. "மேகங்களே! இதோ இங்கே கண்ணீர்க்கடலுள்ளது நீவிர் இதனுள் முகந்து மேற்பரந்து தலைவன் செல்லும் அரிய வழியில் மின்னி இடித்து மழைபொழியுங்கள். இக்கண்ணீர்க் கடல் வற்றாமல் உங்களுக்கு உதவியாகப் பெருகிக்கொண்டே இருக்கும்." என்று அந்த அன்புள்ளம் மேகத்தோடு பேசும் பேச்சை இதோ நம்செவிகளும் கேட்கின்றனவே. 'துணையுநர் விழைதக்க' என்ற பாடலில் உள்ளது. இக்காட்சி.

'தாழ்பு, துறந்து தொடி நெகிழ்ந்தான் போகிய கானம்
இறந்தெரி ஙையாமல் பாஅய் முழங்கி
வறந்தென்னை செய்தியோ வானம் சிறந்தவென்
கண்ணீர்க் கடலாற் கனைதுளி வீசாயோ
கொண்மூக் குழீஇ முகந்து.' (18 - 22 வரி.)

அஞ்சொல் நுண்தேர்ச்சிப் புலவோர் கொண்டாடும் கலித்தொகைக் கவின் காட்சிகளை அறியுந்தோறும் நமது அறியாமையையே நாம் காண்போம்.

(விரியும்)

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Amirthagadeswaraswami Devasthanam, Tirucadaiyur.

I had the uplifting soul elevating experience while worshipping in this shrine. The Devasthanam is well managed and well kept up.

(Sd.) K. Veerasami,
Judge,
Madras High Court.

26—2—67.

திருத்தொண்டர் வரலாறு

வித்துவான். சா. குருசாமி தேசிகர்.

(மலர் 26, இதழ் 3, பக்கம் 161 இன் தொடர்ச்சி)

(3) இயற்பகை நாயனார்

' இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன் '

— திருத்தொண்டத் தொகை.

" செய்தவர் வேண்டியது யாதும் கொடுப்பச் சிவன்தவனாய்க்
கைதவம் பேசிநின் காதலி யைத்தருக என்றலுமே
மைதிகழ் கண்ணியை யீந்தவன் வாய்ந்த பெரும்புகழ்வந்து
எய்திய காவிரிப் பூம்பட் டினத்துள் இயற்பகையே."

— திருத்தொண்டர் திருவந்தாதி.

சோழவளநாட்டில் காவிரிப்பூம்பட்டினத்தில் வணிகர் மரபில் தோன்றியவர் இயற்பகை நாயனார். செல்வச் செழுங்குடியில் தோன்றிய இவர் சிவபெருமானிடத்தில் சிறந்த பக்தி கொண்டவர். சிவனடியார்கள் விரும்பிக் கேட்கும் பொருள்களை இல்லை என்னாது வழங்கும் வள்ளன்மை யுடையவர். உலகியலுக்குப் பகையாய்த் தொண்டு புரிந்த காரணத்தால் இயற்பகையார் என்ற பெயரைப் பெற்றவர்.

சிவபிரான் இயற்பகையாரின் பக்தியை வெளிப்படுத்தல் :-

சிவபெருமான் இயற்பகையாரின் ஈகைத்திறனை உலகிற்குக் காட்ட விரும்பினார். திருவெண்ணீறு அணிந்து, காமபரவசனாய் இழிந்த செயல் செய்யும் ஒரு தூர்த்த வேடம் கொண்ட ஒரு அந்தணர் வடிவத்தோடு இயற்பகையார் வீட்டிற்கு எழுந்தருளினார். இயற்பகையார், வந்தவர் சிவனடியாரே என்று கருதி அன்போடு வணங்கி வரவேற்றார்.

மனைவியைத் தருக ' :-

தூர்த்தவேடங்கொண்டு வந்த அந்தணர் இயற்பகையாரை நோக்கி, ' அன்பனே ! அடியார்கள் வேண்டுவனவற்றை இல்லையென்னாது நீ வழங்கிவருவதாகக் கேள்வியுற்றோம். நாம் ஒரு

பொருளை வேண்டி உம்மிடம் வந்துள்ளோம். நீ கொடுப்பதாகக் கூறினால் வேண்டுவது யாதென்று கூறுவோம்' என்றார். இயற்பகையார் 'என்னிடம் உள்ள பொருள்கள் யாவும் சிவனடியார்களுக்கே உரியனவாகும். ஐயுற வேண்டாம்' என்றார். சிவபிரான் 'நாம் உன் அன்பிற்குரிய மனைவியைப் பெற விரும்பி வந்துள்ளோம்' என்றார். அவ்வார்த்தைகளைக் கேட்ட இயற்பகையார் முன்பிருந்த மகிழ்ச்சியைக் காட்டிலும் பன்மடங்கு மகிழ்ச்சி கொண்டு, 'என்னிடம் உள்ள பொருளையே கேட்டது என் புண்ணியப் பயனாகும்' என்று கூறி வீட்டினுள் நுழைந்து மனைவியை நோக்கி 'நான் இன்று உன்னை இங்கு வந்துள்ள உண்மை அடியார் ஒருவர்க்கு அளித்துவிட்டேன்' என்று கூறினார். அதனைக் கேட்ட அவர் மனைவியார் முதலில் மனங் கலங்கி, பின் ஒருவாறு தெளிந்து 'தாங்கள் இட்ட கட்டளையை நிறைவேற்றாது செய்யத்தக்கது யாது?' என்று கூறி வணங்கினார். இயற்பகையாரும் தம் மனைவியை எதிர் வணங்கினார். அம்மையார் உடனே அடியாரை அடைந்து அவர் திருவடிகளை வணங்கித் திகைப்போடு நின்றார்.

துணை வருக :-

இயற்பகையார் அந்தணரை நோக்கி 'இனி நான் செய்யும் பணி யாது?' என்று வினவினார். அந்தணர் 'அன்பனே! நான் இப்பெண்ணை அழைத்துப் போகும்போது உன் சுற்றத்தாரையும், ஊரவரையும் கடந்து செல்லும் வரை நீ துணைவர வேண்டும்' என்றார். அதைக் கேட்ட அடியவர் இப் பணியை அவர் கூறுதற்குமுன் நானாகவே செய்திருக்கவேண்டும். அவர் சொல்லிப் பின் செய்ய நேரிட்டதற்கு மனம் வருந்தி, இடுப்பில் கச்சையணிந்து, வாளையும் கேடயத்தையும் கையிலேந்தி வழித் துணையாகப் பின் சென்றார்.

உறவினர் வழி மறித்தல் :-

அப்போது இயற்பகையாருடைய உறவினர்கள் நிகழ்ந்ததை அறிந்து தங்கள் குலத்திற்குப் பழி விளைந்ததாக அஞ்சினர். 'மனைவியைப் பிறர்க்குக் கொடுக்கும் இக் கொடிய செயல் செய்தவர் உலகில் யாரும் இல்லையே! இச்செயல் உலக இயற்கைக்குப் புறம்பானது. இயற்பகையார் பித்துக்கொண்டுவிட்டார் போலும்! நம் குலப் பெண்ணை வேறொருவன் அழைத்துச் செல்வதா; இப் பழியைப் போக்குவோம்' என்று கூறி வேல் வில் வாள் முதலிய ஆயுதங்களை எடுத்துக்கொண்டு சென்று

வேதியரை, வளைத்துக்கொண்டு வழிமறித்துத் தடுத்தனர். 'கொடியவரே! எங்கள் குலப் பெண்ணை விட்டுச் செல்' என்று கூறினர். வேதியர் பயந்தவர்போல அம்மையாரை நோக்கினார். அம்மையார் 'இறைவரே! அஞ்சவேண்டாம்; இயற்பகையார் அவர்களை வெல்வார்' என்று கூறினார். இயற்பகையார் 'அடியவரே மனந்தளரவேண்டாம்' என்று கூறி உறவினர்களைநோக்கி நீங்கள் ஓடிப்போய் உயிர் பிழைத்துக்கொள்ளுங்கள்; இல்லையேல் என் வாளுக்கு இலக்காக நேரிடும் என்று எச்சரித்தார்.

உறவினர்களைக் கொல்லுதல் :-

உறவினர் இயற்பகையாரைப் பார்த்து 'நம் குலத்திற்குத் தீராப்பழி விளைத்தாய். நாங்கள் யாவரும் இறக்கநேர்ந்தாலும் இப்பெண்ணை வேதியன் அழைத்துப்போக விடமாட்டோம்' என்று கூறி வேதியரைத் தடுத்தனர். இயற்பகையார் வாளைக் கையிலெடுத்து எதிர்த்துநின்றவரை யெல்லாம் துணித்தார். வேதியரை நோக்கி 'அடிகளே! நீர் அஞ்சாதபடி இக்காட்டினைக் கடந்து செல்லுமளவும் நான் துணை வருவேன்' என்று கூறி அவரோடு துணைசென்றார்.

வேதியர் விடையளித்தல் :-

திருச்சாய்க்காடு என்னும் தலத்திற்கு அருகில் வந்ததும் அந்தணர் இயற்பகையாரைப் பார்த்து 'இனி நீர் நும் இல்லம் செல்க' என்று கூறினர். நாயனாரும் வணங்கி விடைபெற்றுத் திரும்பினார். செயற்கரும் செயல் செய்து திரும்பும் இயற்பகையாரை வேதியராய் வந்த இறைவன் மகிழ்ந்து நோக்கினர். வேதியர் மீண்டும் நாயனாரை அழைத்து, இயற்பகை முனிவனே ஓலம்! இங்கே நீ வருவாய் ஓலம்! செயற்கரும் செய்கை செய்த் தீரனே ஓலம்! என்று ஓலமிட்டார்.

" இயற்பகை முனிவா ஓலம்! ஈண்டுநீ வருவாய் ஓலம்!
அயற்பிலா தானே ஓலம்! அன்பனே ஓலம்! ஓலம்!!
செயற்கரும் செய்கை செய்த தீரனே ஓலம்! என்றான்
மயக்கறும் மறையோ னிட்டு மாலயன் தேட நின்றான்."

வேதியரின் கூக்குரல் கேட்டு இயற்பகையார் 'இன்னும் தேவரீருக்குத் தீங்கு செய்பவர் உளராயின் இவ்வாளினால் துணிப்பேன்' என்று கூறிக்கொண்டு ஓடிவந்தார். அப்போது சிவவேதியர் மறைந்தார்!

சிவபெருமான் காட்சி தந்தருளல் :-

ஓடிவந்த இயற்பகையார் சிவவேதியரைக் காணுது தம் மனைவியாரை மட்டும் கண்டார். அப்போது பெருமான் உமையம்மையோடு விடைமீது எழுந்தருளி அருட்காட்சி வழங்கினர். நாயனர் வீழ்ந்து பணிந்து,

"சொல்லுவ தறியேன் வாழி, தோற்றிய தோற்றம் போற்றி
வல்லவந் தருளி யென்னை வழித்தொண்டு கொண்டாய் போற்றி
எல்லையில் இன்ப வெள்ளம் எனக்கருள் செய்தாய் போற்றி
தில்லையம் பலத்துள் ஆடும் சேவடி போற்றி போற்றி"

என்று கூறித் தொழுதார்.

சிவபிரான் இயற்பகையாரைப் பார்த்து 'இவ்வுலகில் யாவரும் வியப்புறும் வண்ணம் நம்பால் அன்புபூண்டாய்! உன் அன்பின் திறம் கண்டு வியந்தோம். நீ உன் மனைவியோடு எம்மிடம் வருக' என்று அருள்புரிந்து மறைந்தார். தேவர்கள் மலர் மழை பொழிய இயற்பகை நாயனர் மனைவியோடு சிவலோக மடைந்து எம்பெருமானுக்கு அருகில் வீற்றிருக்கும் பேறு பெற்ருர். இயற்பகையாருடைய உறவினர் அனைவரும் வீர சுவர்க்க மடைந்தனர்.

விசேஷ நாட்கள்

10—3—67 முதல் 10—4—67 முடிய

14—3—67	காரடையான் நோன்பு மாலை 5-30 மணிக்கு
16—3—67	வேளூர் கிருத்திகை
17—3—67	நேச நாயனர் திருநக்ஷத்திரம்
19—3—67	கணநாத நாயனர் திருநக்ஷத்திரம்
21—3—67	முனையடுவார் நாயனர் திருநக்ஷத்திரம்
23—3—67	பிரதோஷம்
25—3—67	பங்குனி உத்தரம்
28—3—67	காரைக்காலம்மையார் திருநக்ஷத்திரம்
6—4—67	தண்டியடிகள் நாயனர் திருநக்ஷத்திரம்
7—4—67	பிரதோஷம்

மீன மந்தன்

சிவாகம வித்துவான்,
சிவஸ்ரீ. S. சுவாமிநாத சிவாசாரியார்

" எப்போதகத்து நினைவார்க் கிடரில்லை
கைப் போதகத்தின் கழல் "

கதிரவனுக்குச் சாயாதேவியிடம் தோன்றியவர் சாயா புத்ரர், இவர் ஒரு இராசியினின்றும் மற்றொரு இராசிக்கு இரண்டரை ஆண்டுக்கு ஒருமுறை செல்வதால் சனைச்சரன் (மெதுவாக சஞ்சரிப்பவன்) மந்தன் (மெதுவாகவுள்ளவன்) என்ற பெயர் உண்டாயிற்று.

இவருடைய உடல் கருநிறம், காகத்தை வாகனமாகக் கொண்டவர்.

" நீலாம்பர சயப்ரக்யம் ரவிபுத்ரம் யமாக்ரஜம்
சாயா மார்த்தாண்ட சம்பூதம் தம் நாமாமி சனைச்சரம் "

நீலமான ஆடையணிந்தவர். கருத்த திருமேனியுடையவர், சூரியனின் புதல்வர், இயமனுக்கு முன் பிறந்தவர், (சனிபகவானின் சகோதரன் இயமன்) சாயாதேவியினிடம் பிறந்தவர்; மெள்ள சஞ்சரிப்பவர் என்று அவருடை வடிவம் விளக்கப்பட்டிருக்கிறது. மற்றும் சௌராஷ்டிர தேசத்தில் ஜனித்தவர், காச்யப கோத்திரத்திலுதித்தவர். விகாரி வருஷத்தில் பிறந்தவர். இவருடைய நக்ஷத்திரம் உரோஹிணி, இவருக்குச் சொந்தமான வீடு மகரம் கும்பம் என்ற இரண்டு. இவருக்கு உச்சஸ்தானமாகவுள்ள வீடு துலாம் என்ற இராசியாகும்.

இந்த சனிபகவான் நாளது மாசிமாதம் 26உ (10-3-67) சுக்ரவாரம் இரவு மணி 1-56 க்கு கும்பராசியினின்றும் மீனராசியில் பிரவேசிக்கிறார்.

சனிபகவான் அந்த மீனராசியில் பிரவேசிக்கும்போது கடகத்திலிருக்கும் குருவால் பார்க்கப்படுகிறார். ஆகவே

மீனராசிக்குப் பாபியாக இருந்தாலும், குரு வீக்ஷண்யம் பெற்ற தால் சுபத்தைச்செய்வார். ஆயினும் ஒவ்வொருவருடைய சந்திரலக்னரீதியாக எட்டாம் இடத்திலோ, பன்னிரண்டாம் இடத்திலோ அந்த ஜன்ம ராசியிலோ சனிபகவான் வரும்போது உடல் பொருள் முதலியவைகளுக்கு உபாதிகள் ஏற்படலாம். அவ்வாறு ஒன்றும் நிகழாதிருக்க இந்த சனி பகவானை வழி பட்டால் மகிழ்ச்சிபெற்ற அவர் நலனையே செய்வார்,

" கோசரேவா(த)வர்க்கேவா விஷமஸ்தோயதா சனி:
துஷ்டோ ராஜ்யப்ரத: சத்ய: க்ருத்தோ ராஜ்யாபஹாரக:"

என்றும்,

" ஜன்மஸ் தோ த்வா தசஸ்தோவா அஷ்டமே வாபி குத்ரசித்
சர்வதா மந்தவாரேஷு தில தான்யப்ரதான த:
சனைச்சரோஹம் சுப்ரீத: க்ரஹபீடாம் நிவாராயெ"

கோசரத்திலோ வர்க்கத்திலோ விஷமஸ்தானத்திலிருக்கும் சனி பகவான் மகிழ்ச்சிபெற்ருல் இன்னல் நீக்கி கிரஹ பீடைகளை யகற்றி நன்மை செய்வார். இராஜ்யத்தையே அளிப்பார். கோபம் கொண்டாலோ கொடுத்த ராஜ்யத்தை அபஹரித்து தாளாத்துயரை யளிப்பார். சனிபகவான் ஜன்மத்திலோ அல்லது அஷ்டமத்திலோ அல்லது பன்னிரண்டில் இருந்தாலும் சனிவாரத்தில் எள் எண்ணைதீபம் போடுதல் எள் அன்னம் அர்ப்பணம் செய்தல் எள் தானம் செய்தல் முதலிய வழிபாட்டி ஞல் நான் அவர்களுக்கு நன்மை செய்வேன் என்று சனி பகவானே சொல்லுவதாக தசரதமகாராஜன் கூறுகிருர்.

முன்ஞெரு சமயம் தசரத சக்ரவர்த்தியின் ஆட்சிக்காலத்தில் ஈராருண்டு தேசத்தில் விளைவு குன்றி மழையின்றி கடும் பஞ்சத்திஞல் வருந்தி வாடும் மக்களைக்கண்டு மனம் சகியாத அவ்வரசன் தனது குலகுருவான வசிட்டர் மூலமாக சனி பகவானின் வக்ரகதியால் இவ்வாறு நிகழ்கிறது என்பதை அறிந்து சினங்கொண்டு சனிபகவானுடன் போர் புரிய விஸ் எய்திஞன். இதையறிந்த சனிபகவான் அவ்வரசனின் வீரத் தையும், அவர் மக்கள்பால் செலுத்திய மன இரக்கத்தையும் கண்டு மகிழ்ச்சியடைந்து தசரதர் முன்தோன்றி நாடு வளம் பெற ஆசிகூறி தானும் வக்ரகதியினின்றும் நேர்மையடைந்து மானிலத்தில் மாரி நல்கும்படி செய்து மக்களை இன்புறச் செய்தார் என்று ஒரு வரலாறு கூறுகிறது.

எள் எண்ணை தீபம், எள் அன்ன நிவேதனம், எள் தானம் கருப்பு வஸ்திரதானம் முதலியன சனிப்ரீதியாகும். இவ்வாறு சனிப்ரீதியான திரவியங்களால் சனிபகவானை வழிபடுகிறவர்கள் கிரஹ பீடையினின்றும் விடுதலைபெற்று இன்பத்தை நுகர்வார்கள்.

பொதுவாக ஒவ்வொருவருக்கும், ஜன்மராசிக்கு பனிரெண்டு, ஜன்மராசி, ஜன்மராசிக்கு இரண்டாமிடம் என்ற இவ்விடங்களில் சனிபகவான் வரும்போது அவர்களுக்கு ஏழரை ஆண்டுச் சனி எனப்படும். அந்த நாட்கள் அந்த ராசிக்காரர்களுக்கு ஒரு சோதனைக் காலம் ஆயினும், அந்தக்காலங்களில் சனிக்கிழமைதோறும் மற்றும் தனது ஜன்ம நக்ஷத்திரம் சனிக்கிழமை வரும் காலத்திலும் வன்னிப்பத்திரத்தினல் அருச்சனை செய்யச்செய்து எள்ளன்ன நிவேதனம் எள் எண்ணை தீபம் முதலியவைகளால் சனிபகவானை மகிழ்வித்தால் தானும் சனி பகவானல் ஏற்படும் இன்னல் நீங்கி மகிழ்வுபெறுவான்.

கோசரம் என்பது - சூரியன் முதலிய கோள்கள் தன் தனது காலவரைப்படி மேஷம் முதலிய இராசிகளில் சஞ்சரிக்கும் நிலை, இம்முறையில் சூரியன் ஒவ்வொரு ராசியிலும் ஒருமாதமிருந்து பிறகு அடுத்த ராசிக்குப் போவார் இஃதுபோல், சந்திரன் இரண்டரை நாள் வீதமும், செவ்வாய் ஒன்றரை மாதமும், புதன் ஒருமாதமும், குரு ஒரு வருஷமும், சுக்ரன் ஒருமாதமும், சனி இரண்டரை வருடமும், ராகு, கேது தனித்தனி ஒன்றரை வருஷமும் நின்று சஞ்சரிப்பார்கள்.

இந்த கோட்சார முறையில் :-

" முடவன்றன் ஜன்மத்தில் முன்னியவிரண்டு நான்கில்
திடமறு மெட்டிற் பத்திற் சேர்ந்த பன்னிரண்டி னின்றல்.
உடன் மன்னர் பொருள் மாடாடு பெண்டணி மக்கள் சேதம்
அருமையும் பதியும் விட்டே யரசராலலைச்சலாமே "
—சோதிட சிந்தாமணி.

ஜன்மராசி, அதற்கு இரண்டாம்ராசி, நான்காவதுராசி எட்டாவதுராசி பத்தாவதுராசி, பன்னிரண்டாவதுராசிகளில் சனிபகவான் வீற்றிருக்கும் காலம் அந்தந்த இராசிக்காரர்கள் முக்கரணத்துடன் சனிபகவானை துதித்து வழிபட நலம் பெறுவார்கள்.

" மழை வழங்குக மன்னவனேங்குக
பிழையில் பல்வள மெங்கும் பெருகுக
தழைகவஞ்செழுத்தோசை தரையெலாம்
பழைய வைதீக சைவம் பரக்கவே "

திருமுறைக்குறிப்பு:

சனிபகவான்

திரு. R. வேலாயுத ஓதுவார்,

இறைவன் ஆணைவழி உலகிடை மேஷமாதி மீனம்வரை உள்ள பன்னிரண்டு இராசிகளில் இடங்கொண்டிருந்து உலக மக்களின் வாழ்க்கையிற் பெறற்குரிய இன்ப துன்பங்களைத் தோற்றுவித்து அருள்புரிபவர்கள் சூரியன் முதலாகிய நவக்கிரக மூர்த்திகள். அவர்களுள் ஒருவராகிய சனிபகவான்; மக நக்ஷத் திரத்தில் (சிம்மராசியில்) பிரவேசிக்கின்ற காலம் மிக்க கொடுமை என இறைவரை நோக்கிச் சுந்தரரும், மீனில் (மீனத்தில்) சனி புகும் காலம் மேகம் பொழிதலை மறந்து உலகில் உடலங்கள் சலிப்புறும் காலம் என மக்களை நோக்கித் திருஞானசம்பந்தரும் அருளிப்போந்தனர்.

அலங்கல்மலி வானவரும் தானவரும்
அலைகடலைக் கடையப் பூதம்
கலங்கவெழு கடுவிடமுண் டிருண்டமணி
கண்டத்தோன் கருதும் கோபால்
விலங்கலமர் புயல்மறந்து மீன்சனிபுக்கு
ஊன்சலிக்கும் காலம் தானும்
கலங்கலிலா மனப்பெருவண் கையுடைய
மெய்யர்வாழ் கழுமலமே.

—திருஞானசம்பந்தர்.

மகத்திற் புக்கதோர் சனிஎனக் கானாய்
மைந்த னேமணி யேமண வாளா
அகத்திற் பெண்டுகள் நான்ஒன்று சொன்னால்
அழையற் போகுரு டாஎனத் தரியேன்
முகத்திற் கண்ணிழந் தெங்ஙனம் வாழ்கேன்
முக்க ணாமுறை யோமறை யோதி
உகைக்கும் தண்கடல் ஓதம்வந் துலவும்
ஒற்றி யூர்எனும் ஊர்உறை வானே.

—சுந்தரர்.

ஆயினும் அத்தகைய காலத்தும்கூட, ஆலகால விடமுண்டு அமரர்களையும் அசுரர்களையும் உலகனைத்தையும் காத்திட்ட நீலமணிகண்டனாகிய சிவனைக்கருதி அச்சிவன் கருதுமிடமாகிய கோயிலில் சென்று வழிபட்டுறையும் மக்கள் அவ்வழிபாட்டினால் நினைவில், கலக்கமுறாத மனத்தைப்பெறுகின்றார்கள்· செயலில் மெய்யர்களாகின்றார்கள். ஈந்துவக்கும் வளமுடைக்கையராய்த் திகழ்கின்றார்கள் என ஞானசம்பந்தர் அருளியுள்ளார்.

நாளது 10—3—67 வெள்ளி இரவு ஸ்ரீ சனிபகவான் கும்ப ராசியிலிருந்து மீன ராசியில் பிரவேசிக்கின்ற காலம் ஆதலால், சங்கரனையும் அவன் அருள்பெற்று; தன்னை வழிபடுபவார்க்கெல்லாம் நலமிக அருளிடும் ஸ்ரீ சனிபகவானையும் வழிபட்டு உலகெலாம் நலம் சிறந்திடகோளறு பதிகத்தை ஓதிப் பிரார்த்திப்போமாக.

['மீன்' என்பது மீனம், நக்ஷத்திரம், மகரம் என்னும் மூன்று பொருளும் காண்டற்குரிய ஒரு சொல்.]

ஸ்ரீ வனதுர்கா மஹிமை

திரு. C. V. ஸ்வாமி சாஸ்திரிகள்

ஓம் நமோ பகவத்யை ஸ்ரீ சந்த்ரசேகரமூர்த்தயே,
ஸச்சிதானந்த ரூபிண்யை ஸ்வாத்மபோத ப்ரபூர்த்தயே.

அரிதரிது மானிடராய்ப் பிறப்பது அரிது. கிடைத்தற்கரிய மனிதப் பிறவியை அடைந்தும், இப் பிறவிக் கடலைக் கடந்து நித்தியானந்தப் பெருவாழ்வைப் பெற முயற்சிசெய்வோர் மிகமிக அரிதாகவே காணப்படுகின்றனர்.

சம்சார சாகரத்தில் மூழ்கிமூழ்கித் தத்தளித்துத் துன்புறுமல், நிலையான பேரின்பத்தை எய்துவதே நமக்கு மனிதயாக்கை அளிக்கப்பட்டிருப்பதன் குறிக்கோளாகும். அந்தக் குறிக்கோளை அடைவதற்கு நாம் செய்யவேண்டுவது என்ன ?

முதலில் சற்குருவை நாடி, அடிபணிந்து, அவரது கருணைக்குப் பாத்திரமாகி, அவரால் அளிக்கப்படுகிற யாதேனும் ஓர் உத்தமமான மந்திரோபதேசத்தைப் பெற்று, உறுதியான நம்பிக்கையுடன் உபாஸ்தி செய்யவேண்டும். உபாஸ்தியென்றல், நெருங்கியிருப்பது எனப் பொருள்படும். உபாசிக்கப்படும் தேவதையுடன் உபாசகனுகிய ஜீவன் நெருங்கியிருக்கவேண்டும், அதாவது, அந்த தேவதை வேறு, தான் வேறு என்ற பேத உணர்வு அறவே அகன்றுவிடும் அளவுக்கு அந்த நெருக்கம் அமைந்திருக்கவேண்டும். இத்தகைய உயரிய பரிபக்குவமே உபாஸ்தியின் லக்ஷணம்.

நமக்கு இந்த நிலை ஏற்படுவதற்காக, ஸ்வானுபவம் பெற்ற மகான்களாகிய நம் முன்னேர்கள், அனேக மார்க்கங்களை வகுத்தருளியுள்ளார்கள். அவர்கள் கருணையுடன் காட்டியிருக்கிற எந்த மார்க்கத்தில் சென்றலும், முடிவில் ஒன்றில்தான் அது கொண்டுபோய்விடும். அந்த ஒன்று எது ?

இந்த ஜகத்தானது, ஸத்து, சித்து, ஆனந்தம், நாமம், ரூபம் என்னும் ஐந்து அம்சங்களைக் கொண்டது. இவற்றுள் நாமமும் ரூபமும் நிலையான உண்மைகளல்ல. அவை மாறி

மாறிவரும் தோற்றங்களேயாகும். ஸத்து, சித்து, ஆனந்தங்களாகிய ஸச்சிதானந்தம்தான் நிலையான உண்மைப் பொருள். இந்த ஸச்சிதானந்தத்தில் நாட்டம் கொண்டவர்களுக்கு, நாமரூபங்கள் தெரியமாட்டா. நாம ரூபங்களில் நாட்டம் கொண்டவர்களுக்கு, ஸச்சிதானந்தம் புலப்படாது. இந்தப் பேருண்மையைத்தான், "கல்லைக் கண்டால் நாயைக் காணோம்; நாயைக் கண்டால் கல்லைக் காணோம்!" என்ற நாடோடி வசனம் தன் உட்பொருளாகக் கொண்டிருக்கிறது. இதையே நம் தெய்வத் திருமூலரும்,

> "மரத்தை மறைத்தது மாமத யானை ;
> மரத்தில் மறைந்தது மாமத யானை ;
> பரத்தை மறைத்தது பார்முதல் பூதம் ;
> பரத்தில் மறைந்தது பார்முதல் பூதம் !"

என்னும் திருமந்திரச் செய்யுளில் மிகத் தெளிவாக விளக்கிக் கூறியுள்ளார்.

தோன்றி நின்று அழியும் நாம ரூபங்கள் தான் நமக்குப் பயத்தைக் கொடுப்பவையாகும். ஸச்சிதானந்தம் அபயத்தைக் கொடுப்பது. நம்மால் உபாஸதி செய்யப்படும் தேவதையை நாமரூபப் பிரதானமான நாட்டத்துடன் அணுகுவோமாயின் உபாசனையின் உத்தம லக்ஷ்யத்தை நாம் அடைவதில்லை. ஆனால், முதலில் நாம் அதை நாம ரூப நாட்டத்துடன் தான் அணுக முடியும். நாம ரூபங்களே நமக்கு முக்கியமானவையாகயிருக்கும் வரையில், நம் உள்ளத்திலும் விருப்பு வெறுப்புக்கள் இருக்கத் தான் செய்யும். விருப்பு வெறுப்புக்கள் நம்மைவிட்டு முழுமையாக ஒழியும்போதுதான், நமது உபாஸ்ய தேவதையின் திருவருளும் நமக்கு முழுமையாக ஏற்படும்.

சருக்கரை, மாவு, நெய் இம்மூன்றையும் சேர்ந்து, நாம் பல்வேறு வகைப்பட்ட தின்பண்டங்களைச் செய்கிறோம். அவை பெயராலும் வடிவத்தாலும் வேறுபட்டு விளங்கினாலும், சுவையில் ஒன்றாகவேயிருக்கின்றது. அந்தச் சுவைதான் நமக்கு இன்பத்தைத் தருவது. அதுவே நமக்கு முக்கியமானது.

அதேபோல, தேவதைகளுக்குள்ளே நாமரூபங்களில் தான் வேறுபாடு உண்டேயொழிய, உண்மையில் எல்லாத் தேவதைகளும் ஸச்சிதானந்த மயமாய்த் தான் திகழ்கின்றன. ஆனால், இந்த உயரிய தத்துவம் நமக்கு அனுபவபூர்வமாய் சித்திக்கும் வரையில், நாம் எந்த தேவதையை உபாஸதி செய்தாலும்,

அதனுடைய நாம ரூபங்களில் தான் நமது நாட்டம் சென்று கொண்டிருக்கும்.

நாமரூபமயமான வெளிப்பார்வையை விட்டுவிட்டு, சச்சிதானந்த மயமான உட்பார்வையில் நாம் ஊன்றி நிற்கப் பழகுவோமானல், இந்தப் பிறவிக்கடலை நாம் மிக எளிதில் கடந்து விடலாம்.

நாமரூப நாட்டத்தால் அனுகூலப் பிரதிகூல பாவங்கள் தோன்றுகின்றன. அவை விருப்பு வெறுப்புக்களை விளைவிக்கின்றன. ஆனல் இவை முதலில் ஏற்படத்தான் செய்யும். சாதனை முதிரமுதிர, இவை தாமாகவே ஒழிந்துவிடும்.

கடலில் அலைகள் தோன்றுவதுபோல, சச்சிதானந்தத்தில் நாமரூபங்கள் தோற்றமளிக்கின்றன. அந்த நாம ரூபங்களின் தன்மைக்குத் தக்கபடி, தேவதைகளை உக்ரமானவையென்றும் சாந்தமானவையென்றும் நாம் வேறுபடுத்திக் கற்பனை செய்துக் கொள்கிறோம்.

எடுத்துக்காட்டாக, துர்கையென்ருல் அது ஓர் உக்ரமான மூர்த்தியென்பதாக, மக்களிடையே ஒரு பொதுவான கருத்து நிலவி வருகிறது.

இந்த துர்கையின் அவசர பேதங்கள் எவ்வளவோ இருக்கின்றன. அவற்றுள் வனதுர்கை யென்பது ஒன்று. இந்த வன துர்கையின் தன்மையைச் சற்று ஆராய்ந்து பார்ப்போம்.

துர்கம் என்ருல் அகழி. முற்காலத்தில், அரசர்கள் தங்கள் கோட்டையைச்சுற்றி, எதிரிகள் எளிதில் அடையமுடியாதபடிக்கு, சில அகழிகளை அமைத்துக்கொண்டார்கள். அவற்றிற்கு ஜல துர்கம். வனதுர்கம், கிரிதுர்கம் என்றெல்லாம் பெயருண்டு. ஜல துர்கம் என்ருல், நீரினல் ஆன அகழி. வனதுர்கம் என்ருல். காடுகளால் ஆன அகழி. கிரிதுர்கம் என்ருல், மலைகளால் ஆன அகழி. இந்த துர்கங்களைக் கடந்து செல்வது மிகவும் கடினமாகும். இவ்விதமான துர்கங்களிலிருந்தும் காப்பாற்றுவதால், ஜகன்மாதாவாகிய சிற்சக்தி துர்கா என்னும் பெயரால் அழைக்கப் படுகின்ருள். அதாவது, நாம் மிகவும் சிரமத்துடன் அடைய வேண்டிய ஒரு இலட்சியத்தை மிகவும் அனயாசமாக நமக்குக் கைகூட்டி வைப்பதால், அம்பிகை துர்கையென்று பெயர் பெறுகிருள் என்பதாக உபநிடதம் கூறுகிறது.

(தொடரும்)

நவசத்திகளின் வழிபாடு

சிவாகம வித்துவான்,

சிவஸ்ரீ. S. சுவாமிநாத சிவாசாரியார்

(மலர் 26, இதழ் 3, பக்கம் 173 இன் தொடர்ச்சி)

ஒன்பது என்ற எண் மிக்க உயர்வுள்ளது. எல்லோராலும் வணங்கக்கூடியது சர்வசித்திகளையுமளிக்க வல்லமையுள்ள தெய்வத்தன்மை வாய்ந்தது.

உலகத்தில் மக்களால் செய்யப்படும் நல்ல தீய காரியங்களுக்குச் சாட்சிகளாக உள்ளவர்கள் ஒன்பதின்மர். அவர்கள்

" சூரியஸ் ஸோமோ யாம: காலோ மஹாபூதாநி பஞ்சச,
ஏதே சுபாசுபஸ்யேஹ கர்மணோநவ சாக்ஷிண: "

சூரியன், சந்திரன், இயமன், காலன், ப்ருதிவி, ஜலம், அக்னி, காற்று, ஆகாயம், என்ற இவர்கள் ஆவார்கள்,

மற்றும் உலகத்தில் வாழும் மக்களின் காலசக்ரங்களைச் சுழற்றும் நாயகர்களும் ஒன்பதின்மர். அவர்கள் இனன், இந்து. பூசுதன், சோமசுதன், தேவகுரு, தைத்யகுரு, சூரியசுதன், ராகு. கேது என்ற ஒன்பது பேர்கள்.

உலகத்தில் ரஸங்களும் ஒன்பது என்று கணக்கிடப்பட்டிருப்பதைக் காணலாம். அவை சிருங்காரம், வீரம், கருணை, அற்புதம், ஹாஸ்யம், பயானகம், பீபத்ஸம், ரௌத்ரம், சாந்தம் என்பன.

ரத்னங்களும் - வைரம், வைடூர்யம், கோமேதம், புஷ்யராகம், இந்திர நீலம், மரகதம், மாணிக்கம், ஸ்படிகம், பவழம் என்ற ஒன்பதாகவே காணப்படுகின்றன.

த்வக், குருதி, மேதஸ், அஸ்த்தி, மஜ்ஜை, சுக்லம், ப்ராணன், ஜீவன் என்ற தாதுக்களும் ஒன்பது. இவைகளில் ஐந்து தாதுக்கள் சிவமூலங்கள். நான்கு தாதுக்கள் சத்திமூலங்கள்; ஆகவே தாதுக்களும் ஒன்பதாகும்.

" த்வக்ஸ்ருங்மாம்ஸ மேதோஸ்தி தாதவ: சத்திமூலகா :!
மஜ்ஜா சுக்ல ப்ராண ஜீவ தாதவ : சிவமூலகா :!
நவதாது ரயம் தேஹ: நவ யோநி ஸமுத்பவ :!

—காமிகாகமம்.

நமது ஆக்கையும் ஒன்பது துவாரங்களை உடையது என்று யோகசாஸ்திரங்கள் கூறுகின்றன.

இவ்வுலகில் பாரதம் முதலிய கண்டங்களும், ஒன்பதுதான் அதாவது இந்துகண்டம், மேருகண்டம், தாம்ரகண்டம், கபஸ்தி கண்டம், சதகண்டன், சௌம்யகண்டம், கந்தர்வகண்டம், பரத கண்டம் என்பவை.

குமாரனுடைய உத்பத்தி காலத்தில் தேவியின் சிலம்பு மணிகளின்றும் சிதரிய மணிகள் ஒன்பது. அவற்றினின்றும் உத்பவித்த கன்னியர்களும் ஒன்பதின்மர். அம்மணியினின்றும் தோன்றிய வீரர்களும் ஒன்பது பேர்கள்.

மாசறு மன்னவர் தம்பெயர் வீர
வாகு வெனுந்திரு வள்ளல் வளைக்கைக்
கேசவனும்பரா புகழ்ந்திடு வீர
கேசரி வீரமகேந்திரனென் போன்
வீசு புகழ்ப்பேறு வீரமகேசன்
வீர புரந்தரன் வீரவரக்க
ளுசறு வீரதிவாகரன் வீர
ராந்தகன் வீரமடைந்திடு தீரன்.

—ஸ்ரீசம்பந்தசரணாலய சுவாமிகள்.

வீரவாகு, வீரகேசரி, வீரமகேந்திரன், வீரகேசன், வீர புரந்தரன், வீரவரக்கன், வீரதிவாகரன், வீராந்தகன், வீரதீரன் என்ற ஒன்பது வீரர்கள். இவர்கள் முருகப்பெருமானின் அருள் பெறும் வீரர்கள். இறைவனின் திருநோக்கினால் மணிமங்கயர்களிடம் தோன்றியவர்கள்.

சிவபெருமானும் உயிர்கள் உய்வதற்காக, சிவம், சத்தி, நாதம், விந்து சதாசிவன், மகேசுவரன், உருத்திரன், திருமால், பிரமன் என்ற ஒன்பது பேதமாகி விளங்குகிருன்.

சிவமொடு சத்தி திகழ் நாதம் விந்து
நவமான ஐம்முகன் ஈசன் அரனும்
பவமுறு மாலும் பதுமத்தோன் ஈரு
நவமவை யாகி நடிப்பவன் தானே. —திருமந்திரம்.

இறைவன் ஒருவனே நவந்தருபேதமாகி நடிப்பான் என்பது கருத்து.

சிற்சத்தியோடு பிரிப்பின்றி நிற்கும் சிவன் ஆன்மாக்களின் மல நோயைத் தீர்த்தற்பொருட்டுச் சுத்தமாயையில் தொழில் செய்யத் திருவுளங்கொண்ட அவதரம்சிவம். இது உயிர்களின் துன்பத்தை நீக்க உன்னிய சந்தர்ப்பமாதலின் பரநாதம் எனவும் படும். அங்ஙனம் திருவுளங்கொள்ளும் பொழுது எங்ஙனம் தொழில் செய்யவேண்டும் என்று எண்ணுகிற அவதரம் சத்தி, சத்தியாவது அடங்கி நிற்கும் ஆற்றல், சிவத்திடம் இந்நிலையில் ஒரு குறிப்பு நிகழும், அதனைப்பரவிந்து என்பர். அதன்பின் திருவுள்ளம்பற்றியவாறு செய்தற்கு முதற் காரணமாய்த் தன்னுள் அடங்கியிருந்த சுத்தமாயையோடு கூடிய அவதரம் நாதம்.

சுத்தமாயையோடுகூடிச் செய்யவேண்டியவற்றைச் செய்ய எண்ணிய நிலை விந்து. இந்த நாதவிந்துக்கள் சுத்தமாயையிற் கூடிய நிலையாயினமையின் அபரநாதம்அபரவிந்து எனவும்படும். இவற்றைச் சிவம், சத்தி எனக்கூறுதலும் உண்டு. இலயசிவம், இலயசத்தி எனப்படுவனவும் இவைகளே ஆம்.

பின்பு இன்னின்னவாறு செய்யவேண்டும் என்று திருவுளம் பற்றிய நிலை சதாசிவம்; எண்ணும் முதன்மை சிவத்தையும், எண்ணுதற்குரிய ஆற்றல் சத்தியையும் குறித்தலின் சதாசிவம் எனப்படும்.

எண்ணியவாறு செய்யும்போது அவரவர் கன்மபலத்தை அவரவர் அனுபவிக்கச்செய்யும் முறையில் பரிபாகப்படாத கன்மபலங்களையும், பரிபாகப்பட்டு அனுபவத்திற்கு வரும் கன்மபலங்களில் உள்ள குண தோடங்களையும் மறைக்கும் நிலை மகேசுரம், உயிர்கள் அனுபவிக்க வேண்டிய கன்மங்களைக் கூட்டியும், அனுபவிக்கவேண்டாத ஐச்வர்யங்களை மறைத்தும் வைத்தலின். மகேசுவரம் எனப்பட்டது.

அங்ஙனம் உயிர்கள் கன்மபலங்களை நுகருங்கால் இளைப்பு ஒழிதற்பொருட்டும், வேறு உலகங்களில்தோன்றி இன்பத் துன்பங்களை எய்துதற் பொருட்டும், இவ்வுலகத்திலேயே வேறு உடலின் வாயிலாக அவைகளை நுகர்தற்பொருட்டு சங்காரம் செய்யும் நிலை உருத்திரன். நுகர்ச்சிக்காக உடலோடு உயிரை நிலைக்கச் செய்கின்ற நிலை விஷ்ணு. நுகர்ச்சிக்குரிய உடல், கருவி, உலகம், பொருள் முதலியவற்றைத் தோற்றுவிக்கும் நிலை பிரமன்.

இவ்வொன்பதில் சிவம், சத்தி, நாதம், விந்து நான்கும் இறைவனது அருவத்திருமேனியாம், சதாசிவம் அருவுருவத் திருமேனியாம், பின் நான்கும் உருவாம் என்க.

சிவபேதம் ஒன்பதுக்குமுரிய சத்திபேதமும் ஒன்பது வகைப் படும்.

சத்தியாய் விந்து சத்தியாய் மனோன்மனிதானாகி
ஒத்துறு மகேசையாகி யுமை திருவாணி யாகி
வைத்திருஞ்சி வாதிக்கிங்கன் வருஞ்சத்தி யொருத்தியாகும்
எத்திற நின்றானீசன் அத்திறமவளு நிற்பள்.

—சிவஞானசித்தியார்.

சத்தற்கு ஞானசத்தியாய், விந்துக்ஷோபத்தைப் பண்ணி விந்து சத்தியாய். சிவன் நாத அதிஷ்டாதாவானபொழுது விந்து அதிஷ்டாத்ரியான சத்தியாய், சதாசிவருக்கு மனோன்மனி சத்தியாய், மகேசருக்கு மகேச்வரி என்னும் சத்தியாய், உருத்திர தேவருக்கு உமை என்னும் சத்தியாய், விஷ்ணுவிற்கு இலக்ஷ்மி என்னும் சத்தியாய், பிரும்மாவிற்கு சரஸ்வதி என்னும் சத்தியாய் விளங்கும் சத்திபேதமெல்லாம் பராசத்தி ஒன்றுலாவதாம்.

" ஏகைவாநேக தாம்யாதி சிவசக்தி ருபாதித: "

சிவசத்தி ஒருத்தியே அனேக சத்தியாகத் தோன்றுகிறாள் என்று மூல சுருதியால் அறியப்படுகிறது. சிவாலயத்தில் யோகசத்தி, போகசுத்தி, வீரசத்தி என மூன்று சத்திகள் பூஜிக்கப்படுகின்றன.

யோகம் போகம்ச வீரஞ்ச சக்தி த்ரய முதாஹ்ருதம்,
யோகம்பீட சமாயுக்த்தம் போகம் வாமெஸமன்விதம்,
வீரம் ஸ்வதந்திர மித்யுக்த்தம் சக்த்திரேவம் த்ருதாபவேத்,

— காரணாகமம்.

இலிங்கம் சிவன், பீடம் சத்தி, இந்த சத்திக்கு யோகசத்தி என்று பெயர். போக சத்தி என்பது அர்த்தமண்டபத்தில் இடப்பாகத்தில் வீற்றிருக்கும் சத்தி. வீரசத்தி என்பது சுவதந்திரமாக வெளியில் தனிக்கோயிற் கொண்டு விளங்கும் சத்தி. இந்த வீரசத்தியே ஒவ்வொரு சிவாலயங்களிலும் தனித்தனியான சிறப்புப் பெயரால் துதிக்கப்படுகிறாள். அதாவது அபிராமி, அகிலாண்டேச்வரி, உண்ணாமுலை, கற்பகாம்பிகை, காமாக்ஷி, கோமதி, தையல்நாயகி, நீலாயதாக்ஷி, மீனாக்ஷி விசாலாக்ஷி என்பன போன்ற பல திருநாமங்கொண்டு புகழப்படுகிறாள். (தொடரும்.)

செய்திகள்

தருமையாதீனத்துக்குச் சொந்தமான திருக்குவ

ஸ்ரீ தியாகராஜசுவாமி தேவஸ்தானத்தில்

ஸ்ரீ வண்டமரும் பூங்குழலாள் சமேத ஸ்ரீபிரமபுரீசுவரசுவாமி நெல் மகோற்சவம் 22—2—67 புதன்கிழமை முதல் 25 2 67 சனிக்கிழமை முடிய உள்ள நாட்களில் நடைபெற்றது. இவ்விழாவில் சுந்தரருக்காக, குண்டையூர்க்கிழார் பெருமானிடம் நெல்பெற்றது. பின்னர் அதைச் சுந்தரரிடம் சேர்ப்பித்தது முதலியன சிறப்பாக நடைபெறுகின்றன. அன்பர்கள் பலர் வந்து வழிபட்டு உய்ந்தனர். விழா நாட்களில் பிரசங்க சபா மண்டபத்தில் நாள்தோறும் மாலை 6 மணிக்குச் சொற்பொழிவும் தேவார பாராயணமும் நடைபெற்றன. 24—2—67 வெள்ளிக்கிழமை நாகப்பட்டினம் தேசீய உயர்பள்ளித் தமிழாசிரியர் தருமையாதீனப்புலவர், வித்துவான். திரு. வை. மு. சண்முக தேசிகர் 'சுந்தரர் அற்புதம்' என்ற பொருளிலும், 25—2—67 சனிக்கிழமை திருவாரூர் உயர்பள்ளித் தலைமைத் தமிழாசிரியர் வித்துவான். திரு. மு. இரத்தின தேசிகர் 'கோளிலித் திருப்பதிகம்' என்ற பொருளிலும் சொற்பொழிவாற்றினர்.

சென்னை, சமயப் பிரசார நிலையப்
பதின்மூன்றுவது ஆண்டு நிறைவு விழாவில்

சென்னைமாநில இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையர்.

திரு. M. S. சாரங்கபாணி முதலியார் அவர்கள்

ஆற்றிய

தொடக்க உரை

அவைத்தலைமை தாங்கும் கனம் நீதிபதி அவர்களே! தவத்திரு தம்பிரான் சுவாமிகள் அவர்களே! தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தின் பதின்மூன்றுவது ஆண்டு நிறைவு விழாவில் பங்குகொள்வது குறித்து மகிழ்ச்சி அடைகிறேன். தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் ஆர்வத்துடன்

இந்நிலையத்தை வளர்த்து வருகிறார்கள். இந்நிலையம் செய்து வரும் செயல்முறைப் பட்டியலை நானே சொல்வதாக இருந்தேன். தம்பிரான் சுவாமிகளே விபரமாகச் சொன்னதால் எனக்குச் சுமை குறைந்துவிட்டது. நாம் செய்யும் நற்பணிகளை எடுத்துச் சொல்லவேண்டும் அம்முறையில் பிரசார நிலையம் பதின்மூன்றுண்டுகளாகச் செய்துவரும் பணிகளை விபரமாகச் சொன்னது பொருத்தமானதே. இப்பிரசார நிலையத்தைப் பார்த்துத்தான் இந்து அறநிலையங்களின் சார்பில் மயிலாப்பூர் ஸ்ரீகற்பகாம்பாள் கல்யாணமண்டபத்தில் இந்து சமயப் பரப்புநர் விளக்குநர் பயிற்சி நிலையம் தொடங்கினோம். அதிலும் நல்ல பயன் கிடைத்து வருகிறது. தமிழ்நாடு தெய்விகப் பேரவையைப் பற்றித் தம்பிரான் சுவாமிகள் குறிப்பிட்டார்கள். மடாதிபதிகள் அனைவரும் சம்மதித்து பேரவையை இயக்க முன்வந்திருப்பது நாமெல்லோரும்செய்த பாக்கியம்தான். இதைத் திருவருளாகவே கருதுகிறேன். பேரவைப்பணியில் சென்னை நகர முழுவதிலும் சமயப் பிரசாரப்பொறுப்பை இச்சமயப் பிரசார நிலையவர்யிலாக நடத்துவதற்குத் தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் இசைந்துள்ளார்கள். 13 ஆண்டுகளாகப் பிரசாரம் செய்து அனுபவம் உள்ள இத்த ஸ்தாபனம் சென்னை நகரத்தில் சமயப் பிரசாரம் செய்வது பொருத்தமானதாகும். வருகிற தைமாதத்தில் பேரவைப்பணி தொடங்க இருக்கிறது. அப்போது இப்பிரசார நிலையமும் முழு அளவில் பணிபுரிய இருப்பது மகிழ்ச்சியளிக்கிறது. பிரசாரப்பணி தொடங்குவதற்கு முன்னர் நவசக்திகளை வழிபட்டுத் தொடங்க வேண்டும் என்று ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் சொன்னார்கள். மேலூர் - திருவுடையம்மன், திருவொற்றியூர் - கொடியிடையம்மன், வடதிருமுல்லைவாயில் - கொடியிடை அம்மன், மயிலாப்பூர் - கற்பகாம்பாள், திருவான்மியூர் - திரிபுரசுந்தரியம்பாள், திருவேற்காடு - வேற்கண்ணியம்மன், திருவலிதாயம் - தாயம்மன்.

மாங்காடு - தபஸ்சாக்ஷி, காஞ்சிபுரம் - காமாக்ஷி அம்மன், இவ்வாலயங்களில் வழிபாடுசெய்து அருட்சக்திபெற்று சமயப் பிரசாரம் மேற்கொள்வது மிகவும் பொருத்தமானதே. மார்கழி மாதம் வந்தால் திருவாசகம் எல்லோருக்கும் நினைவுக்கு வரும். இன்று திருவாசகமணியும் மலேயாவில் சமயப்பணி புரிந்து மீண்டும் நம்மிடையே வந்துள்ளார். முத்திநெறி அறியாத மூர்க்கரொடு சேராமல் இருந்தாலே போதுமானது. மூர்க்கர்களைத் திருத்தவேண்டாம். நாம் அவர்களோடு சேராமல் இருந்தாலே அதுவே வெற்றிதான். நாம் சமயப் பிரசாரம் செய்ய வேண்டும் என்பதெல்லாம் பிற மதத்தவரை மாற்றுவதற்

காக அல்ல. நம்மவர்கள் பிற சமயத்துக்குப் போகாமலிருப்பதற்குத்தான். இப்பணியை நாம் சரியாக நிறைவேற்றினால் அதுவே போதுமானது.

சென்னை, தருமையாதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தில்

வேளூர்க் கிருத்திகைப்பிரசாதம் வழங்கும் விழா

புள்ளிருக்குவேளூர் என்னும் வைத்தீஸ்வரன்கோயிலில் 21—1—67 அன்று தைமாதக் கிருத்திகை வலிவலம், திரு. மனத்துணைநாத தேசிகர் உபயத்தில் சிறப்பாக நடைபெற்றது. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானமவர்கள் வேளூருக்கு எழுந்தருளி வழிபாட்டைச் சிறப்பாக நடத்தி வைத்தார்கள். மேற்படி அபிஷேக அர்ச்சனைப் பிரசாதங்கள், சென்னை சமயப் பிரசார நிலையத்தில் 22—1—67 மாலை 7-மணிக்கு டாக்டர், திரு. R. இரத்தினசாமி M. B. B. S., அவர்கள் தலைமையில் வேளூர்த் தேவாரம், திருப்புகழ், பிள்ளைத்தமிழ் பிரார்த்தனை நிகழ்த்தி கிருத்திகைப் பிரசாதம்பெறும் உறுப்பினர்கட்கும். அன்பர் பலர்க்கும் வழங்கப்பட்டன. டாக்டர், தமது தலைமையுரையில் வைத்தியர்கட்கு எல்லாம் வைத்தியநாதராக விளங்கும் பெருமானுடைய பிரசாதம் நாம் இருக்கும் இடந்தேடி வருவது நாம் செய்த பாக்கியமே என்றார்கள். தருமபுரம், திரு. P. சுவாமிநாதன் பிரார்த்தனை நிகழ்த்தினார். ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரையும், நன்றியுரையும் நவின்றார்கள்.

திருவாமூரில்

தைமாத முதற் சதயவிழா

ஸ்ரீ அப்பர் சுவாமிகள் அவதாரத்தலமாகிய திருவாமூரில் திருக்கோயில் கொண்டுள்ள ஸ்ரீ அப்பர்சுவாமி ஆலயத்தில் 14—1—67 பொங்கல் திருநாளில் சதயத்தன்று காலை சித்தாணங்கூர் மிராசுதார், திரு. வி. இராமமூர்த்தி ரெட்டியார் உபயத்தில் ஸ்ரீ அப்பர், ஸ்ரீ திலகவதியார், ஸ்ரீ பசுபதீஸ்வரர், ஸ்ரீதிரிபுரசுந்தரி அம்மை முதலிய மூர்த்தங்கட்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் சிறப்பாக நடைபெற்றன. மதியம் மாகேஸ்வரபூசையும். மாலை உழவாரப்பணியும், கூட்டு வழிபாடும் சிறப்புற நிகழ்ந்தன. சென்னையிலிருந்து ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள், திரு. K. கமலக்கண்ணன் முதலியோர் வந்து வழிபாடாற்றிச் சென்றனர். பரதூர் மிராஸ்தார், திரு. K. M. இராஜசேகரம்

பிள்ளை காணிக்கையாக அளித்துள்ள ரூ. 400/- மதிப்புள்ள மூன்றுகல் வைர மூக்குத்தி ஸ்ரீ திரிபுரசுந்தரி அம்பாளுக்கு அணிவிக்கப்பெற்றது.

பொங்கல் புதுநாள் விழா

சென்னை. தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலைய மன்றத்தில் 11—1—67 மாலை பொங்கல் புது நாள் சென்னை மாநில செய்தித்துறை அமைச்சர் கனம், திரு. ஜி. பூவராகவன் அவர்கள் தலைமையில் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. நிலையத் திருமுறை வகுப்பு ஆசிரியர் தருமபுரம் திரு. பி. சுவாமிநாதன் கடவுள் வணக்கம் பாடினார். ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரை கூறினார்கள். அமைச்சர் தமது தலைமையுரையில் மக்கட்கு உதவி புரியும் எல்லோருக்கும் நன்றி செலுத்தவேண்டியது மக்கள் கடமை என்பதைப் பொங்கல் புதுநாள் நமக்கு நினைப்பூட்டுகிறது. தோன்றாத்துணையாய் உதவிபுரியும் இறைவனுக்கும், இறை யருளால் உதவிபுரியும் இந்திரன், சூரியன் முதலிய தேவர் கட்கும், நம்முடன் உழைக்கும் காளை இனங்கட்கும் நாம் வழிபாடு செய்து நன்றியறிதலைப் புலப்படுத்திக் கொள்கிறோம், இறைவன் எவ்வளவு உதவி செய்தாலும் மக்கள் இறைவனைக் குறை சொல்லத்தான் செய்கிறார்கள். அதைப்போல் அரசாங்கம் எவ்வளவு நன்மை செய்தாலும் உதவியைப்பெறும் மக்கள் குறை சொல்லத்தான் செய்கிறார்கள். இம்மனப்பான்மை மாறவேண் டும். இத் தைப்பொங்கல் மங்கலநாளில் நல்ல கருத்துக்கள், நல்லுறவுகள், நல்ல செயல்கள் மக்களிடையே பொங்கட்டும் என்று கூறினார்கள்.

திருக்கோயில் ஆசிரியர், திரு. N. R. முருகவேள் அவர்கள் "பொங்கல் புதுநாள்" என்பதுபற்றிப் பழைய காலந்தொட்டு பொங்கல் புதுநாள் எவ்வாறெல்லாம் கொண்டாடப்பட்டது தமிழகத்தில் என்பதைச் சங்க இலக்கிய ஆதாரங்களுடன் விளக்கிப் பேசினார்கள். மார்கழி மாதம் முழுவதும் விடியற் காலையில் நிலையத் திருமுறை வகுப்பு மாணவ மாணவியர்களும், நிலைய அன்பர்களும் தேவாரம், திருவெம்பாவை, திருப்பள்ளி யெழுச்சி பாராயணத்துடன் திருவீதிவலம் வந்து மார்கழிமாத பஜனையைச் சிறப்பாக நிகழ்த்தினார்கள். அதன் பூர்த்தி விழா வும் இன்று மாலை கொண்டாடப்பட்டது. பாராயணத்தில் பங்குகொண்டவர்கட்கும், உபய வழிபாடு நிகழ்த்தியவர்கட்கும், பொங்கல் விழாவில் பங்குகொண்டவர்கட்கும், ஸ்ரீமத் சோம சுந்தரத் தம்பிரான் சுவாமிகள் நன்றி நவின்றார்கள். திரு. பி. சுவாமிநாதன் கடவுள் வாழ்த்துப் பாடினார்.

மதிப்புரை

1. சோழர் கலைப்பாணி
2. கோப்பெருஞ்சிங்கன்

ஆசிரியர்: திரு. என் ஆர். பாலசுப்பிரமணியம் அவர்கள்; விற்பனையுரிமை: பாரிநிலையம், 59, பிராட்வே, சென்னை-1; பக்கங்கள்: (1) 200; விலை ரூ. 12-50. (2) 160; விலை 3-50.

வரலாற்றுக் கட்டுரைகளைச் சீரிய ஆராய்ச்சிவன்மையுடன் எழுதிவரும் பழம்பெரும் புலவர் திரு. என். ஆர். பாலசுப்பிரமணியம் அவர்களை அறிவுலகு நன்கறியும். கோயிற்கலை பற்றிய நுட்பங்களை ஆங்காங்கு சென்று நேரிற்கண்டு இன்புற்று அவற்றை எழுத்துவடிவில் வடித்துள்ளார். இவரது இவ்விரு நூல்களும் தமிழ் வரலாற்றுலகிற்குக் கிடைத்த இரு செல்வங்கள் என்று கூறலாம். "சோழர் கலைப்பாணி"யில் இணைக்கப் பட்டுள்ள விளக்கப் படங்கள் அழகுற அச்சிடப்பெற்றுள்ளன. பொதுவாகக் கோயில் வளர்ச்சியை முதற்கண் ஆராய்ந்து பின்னர் சோழர்காலத்தை முற்காலம், பிற்காலம், இடைக்காலம் என்று பகுத்துக் கொண்டு அவ்வக்கால கலைப்பாணியைப் பெரிதும் விளக்கியுள்ளார்; [முற்காலம்; கி. பி. 850 - 950]; இடைக்காலம்: கி. பி. 985 - 1070; பிற்காலம்: கி. பி. 1070 - 1270] திருமுறைகளின் கோயில் வகைகளையும் காட்டியுள்ளார். (பக் 191 - 193).

கோப்பெருஞ்சிங்கன், பழைய பல்லவப் பேரரசை நிலை நிறுத்த முயன்ற பெருவீரன். அவன் வரலாற்றை மற்றொரு நூல் ஆராய்கின்றது. 'இவன் ஒருவனே' என்ற கருத்தை ஆராய்ந்து சான்றுகளுடன் நிறுவுகிறார். (அத். 3) வெளிவந்துள்ள எல்லாக் கல்வெட்டாண்டறிக்கைகளையும் ஆராய்ந்து விளக்குகின்றார்.

தமிழில் வரலாற்று நூல்கள் இவ்வாறு பெருகிச் செழித்தல் வேண்டும். சான்று காட்டி நிறுவும் துணிவும், தெளிவும், உண்மை காணும் வேட்கையும், நல்லன எல்லாம் நம்மில் உண்டு என்று காணும் நலமும் உடைய இவ்வாசிரியர் வழி இன்னும் பல பனுவல்கள் வெளிவர இறையருள் புரியுமாக; தமிழ் மாணவர்கட்கும், ஆய்வாளர்கட்கும் பெருவிருந்தாக இவ்விரு நூல்களும் விளங்குகின்றன.

—செ. சிங்காரவேலன் எம். ஏ.,

எதிர்காலம் -திரு. கே முத்துஜோதிடர்

(பராபவஞூ பங்குனிமீ 1உ முதல் 30உ முடிய)

(15—3—67 முதல் 13—4—67 முடிய)

1. மேஷம் - அசுவதி - பரணி - கார்த்திகை ¼

மேஷராசி 9 பாதங்களும் மிச்ரபலனைத் தரும். வரவு செலவு சமனாகும். தொழில் சம்பந்தமாயும் குடும்ப சம்பந்தமாயும் அடிக்கடி அல்லல் ஏற்படும். வைத்தியச் செலவு அதிகமாகும். ஆனாலும் மேலோர் பெரியோர்களின் அன்பினாலும் தெய்வ பலத்தாலும் கடைசியில் எல்லாம் சுபமாக நடக்கும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

2. ரிஷபம் - கார்த்திகை ¾, ரோஹிணி - மிருகசீர்ஷம் ½

ரிஷபராசி 9 பாதங்களும் பூர்ணமான சுபத்தையே தரும். உத்தியோகத்தில் உயர்வும், மேலோர் பெரியோர்களுடைய அன்பும், தனதான்யஸமிருத்தியும், வியாவகாரத்தில் வெற்றியும் ஏற்பட்டு மனத்திற்கு சந்தோஷத்தைத் தரும். திங்கள், புதன் சுபமாகும்.

3. மிதுனம் - மிருகசீர்ஷம் ½, திருவாதிரை - புனர்பூசம் ¾

மிதுனராசி 9 பாதங்களும் பூர்ணமான சுபத்தையே தரும். நஷ்டமான பொருள்கள் தானாக வந்துசேரும். சத்துருக்கள் சரண் அடைவார்கள். வியவகாரம் ஜெயிக்கும் நூதன வஸ்திராபரணச் சேர்க்கை ஏற்படும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

4. கடகம் - புனர்பூசம் ¼, பூசம் - ஆயில்யம்

கடகராசி 9 பாதங்களும் மிச்ரமான பலன்களைத் தரும். மாதம் ஆரம்பத்தில் சுபமிராது. சகல காரியங்களும் தலக்கமும், தன் இஷ்டப்படி நடக்காமலும் தடுக்கும். பின் பாதியில் எல்லாம் அனுகூலமாகும். வியவகாரம் ஜெயிக்கும். நஷ்டமான பொருள்கள் வந்துசேரும். நூதன ஸ்தாவர ஜங்கம சொத்துக்களின்

கிரயவிக்ரயங்களும், லாபங்களும் ஏற்படும். திங்கள், புதன் சுபமாகும்.

5. சிம்மம் - மகம் - பூரம் - உத்திரம் $\frac{1}{4}$

சிம்மராசி 9 பாதங்களும் பூர்ணமான சுபமிராது. சதா கவலைகளும், தொழில் தொல்லைகளும், மேலோர் பெரியோர் களின் அன்புக் குறைவும், தெய்வபலக் குறைவும் காட்டும். சதா ஆஸ்திக புத்தியோடு ஸ்ரீ பகவானை உபாசித்துவர சுபம் உண்டாகும். செவ்வாய், சனி சுபமாகும்.

6. கன்னி - உத்திரம் $\frac{3}{4}$, ஹஸ்தம், சித்திரை $\frac{1}{2}$

கன்னியாராசி 9 பாதங்களும் பூர்ணமான சுபத்தையே தரும். அசாத்தியமெல்லாம் சுலப சாத்தியமாகும். வியாதி சாந்தியாகும். நஷ்டமான பொருள் வந்துசேரும். இராஜாங்கமைத்ரமும், தெய்வ பலமும் ஏற்படும். திங்கள், வெள்ளி சுபமாகும்.

7. துலாம் - சித்திரை $\frac{1}{2}$, சுவாதி - விசாகம் $\frac{3}{4}$

துலாராசி 9 பாதங்களும் பூர்ணமான சுபத்தையே தரும். ஆரோக்கியம் உண்டுபண்ணும். தனதான்யப் பெருக்கும், மேலோர் பெரியோர் அன்பும், ஜீவன லாபமும், சஞ்சார பலனும் உண்டுபண்ணும். தெய்வ சக்தி ஓங்கும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

8. விருச்சிகம் - விசாகம் - $\frac{1}{4}$, அனுஷம் - கேட்டை

விருச்சிகராசி 9 பாதங்களும் மிச்ரமான பலன்களைத் தரும். தொழில் நிமித்தமாய் அடிக்கடி சஞ்சாரம் ஏற்பட்டு மனதிற்கு சஞ்சலத்தை உண்டுபண்ணும். நினைத்த காரியங்கள் தவக்கத்தோடு நடக்கும். தெய்வ பலம் முன்னின்று காக்கும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

9. தனுசு - மூலம் - பூராடம் - உத்திராடம் $\frac{1}{4}$

தனுர்ராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனையே தரும். தனதான்யக் குறைவு காட்டும். சகல காரியங்களும் விக்னம் அடையும். ஆனாலும் புத்திராதிகளால் மேன்மையும், சுக வாழ்வும் ஏற்படச் செய்யும். செவ்வாய், புதன் சுபமாகும்.

10. மகரம். உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½

மகரராசி 9 பாதங்களும் பூர்ணமான சுபத்தையே தரும். உத்தியோகத்தில் மேன்மையும், மேலோர் பெரியோர் அன்பும், ஆரோக்கியமும் உண்டுபண்ணும். குடும்பம் ஓங்கும். நூதன வஸ்திராபரணங்கள் சேரும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

11. கும்பம் - அவிட்டம் ½, சதயம் - பூரட்டாதி ¾.

கும்பராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனையே தரும். வரவு செலவு சமனாகும். சஞ்சார பலன் ஏற்படும். புத்திராதிகளாலும் பந்துமித்திரர்களாலும் தொல்லைகள் உண்டாகிக் கொண்டே இருக்கும். சரீர பீடையும் ஏற்படும். அடிக்கடி கிரக தோஷ நிவாரணங்கள் செய்துகொண்டேவர பூர்ண சுபம் உண்டாகும். சனி, செவ்வாய் சுபமாகும்.

12. மீனம். பூரட்டாதி ¼ உத்திரட்டாதி - ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் பூர்ணமான சுபத்தைத் தராது. எதிர்பாராத வீண் செலவுகளும், அதிகத் தொல்லைகளும், வீண் மனஸ்தாபங்களும் உண்டுபண்ணும். சஞ்சாரங்கள் அதிகமாகும். குடும்பத்தினரால் அதிகமான தொல்லைகள் ஏற்படும். ஆனாலும் சதா கிரஹாராதனங்களும் தேவதாராதனங்களும் செய்து கொண்டுவர பூர்ணமாகக் கவலை நீங்கி, பூர்ணமாக சுபம் உண்டாகும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

முக்கிய கவனிப்பு

குறிப்பு :— கனதனவான்கள் மகாஜனங்கள் மேலோர்கள் பெரியோர்கள் எல்லோருக்கும் வணக்கமாய்த் தெரிவித்துக் கொள்வதாவது :-

எதிர்காலம் நாளது பங்குனிமாதம் 27ஆம் தேதி (10-4-67) சோமவாரம் சைத்ர சுக்கில பிரதமையும், ரேவதி நக்ஷத்திரமும் கூடிய சுபதினத்தில் சாந்திரமானப்படி பிலவங்க வருஷப் பிறப்பு, சுபவேளையில் ஆரம்பமாகிறது. அன்றுமுதல் வசந்த நவராத்திரியும் ஆரம்பமாகிறது. மேற்படி பிலவங்க வருஷத்திற்கு சந்திரன் இராஜாவாகவும், ஸஸ்யாதிபதியாகவும் இரண்டு ஆதிபத்யங்கள் சந்திரனுக்குக் கிடைத்தும், சுக்கிரன் மந்திரியாகவும், சனி தான்யாதிபதியாகவும் அமைந்தமையால் பருவ காலங்களில் மழை பெய்யவேண்டிய இடங்களில் மழை பெய்தும்,

ஸஸ்ய தான்யவிருத்தியாகி வருஷம் முற்பாதிக்குள் கருப்பு தான்யங்களும், இதர புஞ்சை தான்யங்களும் சமிருத்தியாய் விளைந்து விலைவாசிகள் குறைந்து பிரஜைகள் மனநிம்மதியுடனும் சாந்தியுடனும் சுகஜீவனம் செய்வார்கள்.

நாளது பங்குனிமாதம் 20 ஆம் தேதி முதல் செவ்வாய் துலாராசியிலிருந்து கன்னியாராசிக்கு வக்ரமடைந்து சனி அங்காரகன் இருவரும் நேருக்குநேர் சமதிருஷ்டியோடு மூன்றுமாதகாலம் திருஷ்டி தோஷத்தை அடைந்தும், சனியானவர் குருவால் பார்க்கப்பட்டும் (பிலவங்கவருஷம் ஆவணிமாதம் 21 ஆம் தேதி வரையில் பார்க்கப்பட்டும்) மேற்படி வருஷக் கடைசியில் மார்கழிமாதம் 9 ஆம் தேதி முதல் மீனராசியில் சனி இராகு சேர்க்கையும், அதே மீன இராசிக்கு தைமாதம் 23 ஆம் தேதி முதல் செவ்வாயினுடைய சேர்க்கையும் ஏற்பட்டும், (சனி, செவ்வாய், இராகு) மூவரும் சேர்ந்து மீனராசியில் சஞ்சரிப்பதால் தக்ஷிணதேசம் தவிர விந்தியோத்தர தேசங்களிலும் இமாலயப்பிரதேசங்களிலும் அன்னிய நாடுகளிலும் அனேகவிதமான உத்பாதங்கள் ஏற்பட்டும் மாறுதல்கள் ஏற்படும். பரசக்ர பயத்தையும் தரும். விந்தியோத்தரவாசிகளுக்கு மனம் நிம்மதி இருக்காது. இயற்கைக் கோளாறுகளாலும் சிரமத்தைத் தரும். ஆதலால் தக்ஷிணதேச வாசிகள், ஆஸ்தீக மகாஜனங்கள் வியவசாயம் ஆரம்பத்துக்குமுன் அந்தந்த க்ஷேத்திரங்களில் அமர்ந்து இருக்கும் தேவாலயங்களில் அன்னபூர்ண ஹோமமும், பிருத்வீ சாந்தியும் செய்துகொண்டு தான்ய விருத்தி செய்ய ஆரம்பிக்க சுபிக்ஷம் உண்டாகும். உலகமும் சுபிக்ஷம் அடையும். உத்திரதேசவாசிகள் வருஷ ஆரம்பத்திலேயே ஒவ்வொரு கிராமங்களிலும் நகரங்களிலும் மகாசாந்தியும், மகாயக்ஞங்களும் நடத்திக்கொண்டு ஆஸ்தீக புத்தி குறையாமல் தேவதைகளை உபாசித்துக்கொண்டுவர ஸ்ரீ சர்வேசுவரர் அருளால் நன்மையாக நடக்கும். சுபம் உண்டாகும்.

சனீச்வரஸ்துதி

கோணஸ்த: பிங்களோ பப்ரு: க்ருஷ்ணோ ரௌத்ரோந்தகோ யம: |
ஸௌரிச்சனைச்சரோ மந்த: பிப்பலாதேன ஸம்ஸ்துத: |
ஏதானி தசநாமானி ப்ராதருத்தாய ய:படேத் |
சனைச் சரக்ருதா பீடா நகதாசித் பவிஷ்யதி |